
உ

சிவமயம்

# திருமுறை போற்றுந் தெய்வம்




மட்டுவில் ஆ. நடராசா

உ

சிவமயம்

மட்டுவில் ஆ. நடராசாவின்

# திருமுறை போற்றுந் தெய்வம்



உ

சிவமயம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருமுறை போற்றுந் தெய்வம் |
| நூலாசிரியர் | : | மட்டுவில் ஆ. நடராசா |
| முதற் பதிப்பு | : | சுபானு பங்குனி (2004) |
| விலை | : | ரூபா 100/= |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| அச்சுப் பதிப்பு | : | லக்ஷ்மி அச்சகம். கொழும்பு - 13. |


உ

சிவமயம்

# முன்னுரை

சமய தத்துவங்கள் பலவானாலும் எல்லாச் சமயங்களும் 'ஒருவனே தேவன்' என்ற உண்மையை ஒப்புக் கொள்கின்றன.

சில சமயங்கள், கடவுளே உயிர்களையும், அவை உயிருடன் வாழ்வதற்கு வேண்டிய தனு கரண புவன போகங்களையும் படைக்கிறான் என்கின்றன. கடவுள் ஏன் உயிர்களைப் படைக்கிறான்?

சிலர் பகவானின் பிரதி விம்பமே மனிதனென்றும் பரமாத்மாவின் அம்சமே சீவாத்மா என்றும் பகவான் வேறு பக்தன் வேறு என்ற கருத்துக்கு இடமேயில்லை யென்றுங் கூறுகின்றார்கள்.

இன்னொரு பிரிவினர் கடவுளாகிய ஒரு பொருளே பல பல உயிர்களாகவும் பஞ்ச பூதங்களாகவுந் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கின்ற தென்கின்றனர்.

முன்னர்க் கூறப்பட்ட மூன்று பிரிவினரில், முதற் பிரிவினர் தம்மை இந்துக்களென்று கூறுவதில்லை. இரண்டாம் மூன்றாம் பிரிவினர் தம்மை இந்து மதத்தவரென்று கூறுகின்றனர். இந்த இரண்டாம் மூன்றாம் பிரிவினர் பிரமம் ஒன்றே உள் பொருளென்று வாதிப்பவர்களாதலால் 'ஏகான்ம வாதிகள்' எனப்படுகின்றனர்.

இந்த ஏகான்ம வாதிகளின் கூற்றை ஏற்றுக் கொள்வதானால், அதற்கு முன் நாம் பின்வரும் வினாக்களைப் போன்ற பல வினாக்களுக்கு விடை காண வேண்டும்.

1. "அம்சம்" என்னுஞ் சொல் அமிசம், பங்கு, பாகம், கூறு, கலை என்னும் பொருள்களைத் தரும். விம்பம் - நிழல். ஒரு பொருளின் விம்பம் அப்பொருளின் அம்சமாகாது. பொருள் வேறு, அதன் விம்பம் வேறு. பரமாத்மாவின் அம்சமே சீவாத்மாவானால், சீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குரிய இறைமைக் குணங்களெல்லாம் இருக்க வேண்டுமல்லவா?

2. பகவான் வேறு பக்தன் வேறு என்ற கருத்துக்கு இடமில்லையானால், பகவான் ஏன் பகவானென்றும் பக்தனென்றும் இரண்டு பட்டு நிற்கிறான்?

3. உலகத்தைப் பிரமத்தின் பிரதிவிம்பமெனக் கொண்டால், அந்த விம்பத்தை உண்டாக்குவதற்குப் பிரமத்தின் வேறானதொரு ஒளியும் விம்பம் தோன்றுவதற்குரிய இடமும் வேண்டும். அவை எவை?

4. ஒரு விம்பம் தோன்றுகின்றதென்றால், அந்த விம்பத்துக்குரிய தொரு உருவப் பொருள் இருத்தல் வேண்டும். அந்த உருவப் பொருள் பிரமமானால் அது எமக்குப் புலப்படாததேன்?

5. ஏகமாகிய பிரமத்தின் பிரதிவிம்பமே உலகமாகவும் உயிர்களா கவுந் தோற்றுகின்ற தென்றால் எல்லா விம்பங்களும் ஒரே வடிவுடையனவாக வல்லவா இருக்க வேண்டும்? அவ்வாறின்றி உலகும் உயிர்களும் வெவ்வேறு வடிவமுடையனவாகக் காணப்படுவதேன்?

6. ஒருவன் மரத்திலிருந்து விழுந்து வேதனையால் துடிக்கும் போது அவனது நிழலுந் துடிப்பது போலத் தோன்றுகின்றது. ஆனாலும் வேதனையை அனுபவிப்பது விம்பமல்ல, விம்பத்துக் குரியவரே என்பதை நாமெல்லோரும் அறிவோம், நாம் பிரமத்தின் விம்பமானால், இன்ப துன்பங்களைப் பிரமமல்லவா அனுபவிக்க வேண்டும்? அவ்வாறில்லாமல் நாமேன் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றோம்?

இவை போன்ற வினாக்களுக்குச் சரியான விடை கிடைக்காத வரை ஏகான்மவாதிகள் கூறுவதை ஏற்றுக் கொள்வதெப்படி?

சைவ சித்தாந்தம் இவ்வாறான முரண்பட்ட கருத்துக்களுக்கிட மில்லாமல், பதி பசு பாசமெனப்படும் முப்பொருளுமுன்டென்று கூறுகின்றது. பதியைப்போற் பசு பாசங்களும் அநாதியானவை. பதியைப் போலன்றிப் பசு பாசத்தாற் கட்டப்பட்டிருக்கின்றது. அதைக் கட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென்னுங் கருணை காரணமாகவே இறைவன் ஐந்தொழில் செய்கின்றானென்று விளக்கந் தருகின்றது சைவ சித்தாந்தம்.

சைவ சித்தாந்த முதல்நூல்கள் வேத சிவாகமங்கள். இவை சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தவை. இப்பொழுது கிடைத்தற்கரிய பண்டங்களாகிவிட்டன. இவற்றின் இன்றைய நிலைபற்றிய சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களின் சில கருத்துக்களை இவ்விடத்திற் குறிப்பிடுவது பொருத்தமானதாகலாம். அவை :-

வேதமும் சிவாகமும் சிபெருமானால் அருளப்பட்டமையால் அவைகள் சைவ சமயத்தின் பிரமாண நூல்களாம். வேதம் சிவாகமமாகிய இருவகை நூல்களையும் பிரமாண நூல்களாகக் கொள்ளாதவர்கள் சைவ சமயத்தவர்களல்லர்.

சமஸ்கிருதமானது சைவ சமயம் வழங்கும் நாடாகிய பரதகண்டம் முழுவதுக்கும் சாஸ்திர பாஷையாய்ப் பொதுமொழி யாயதால் வேத சிவாகமங்கள் சமஸ்கிருதத்தி லுள்ளவை.........



வேதங்களுக்கு உரைசெய்தவர்கள் பல்வேறு சமயத்தவர்கள். இவர்கள் தங்கள் சமயத்துக்குப் பொருந்தத் தக்கனவாக உரைகளைச் செய்தமையால் இவ்வுரைகளிலே பெரும் பிழைகள் மலிந்தன. உயிர்க் கொலையைப் பற்றிப் பேசாத இடங்களிலே உயிர்க் கொலை விதிக்கப்பட்டதாக இவர்கள் உரை செய்தார்கள்.

வேதங்கள் ஐரோப்பா முதலிய மிலேச்ச கண்டங்களிலும் இப்போது உள்ளன. ஆகமங்களுட் பல சில நூற்றாண்டுகளின் முன் தென்னிந்தியாவிலே இருந்தவையாயினும் இப்போது மறைந்து விட்டன. சில ஆகமங்கள் மாத்திரம் இப்போது தமிழ் நாட்டிலுள்ளன. ஆகமங்களுள் ஒன்றாகிய ரௌரத்தின் ஞான காண்ட சாரமும் அதன் 73 ஆம் படலத்தின் பன்னிரண்டாம் அதிகாரமுமாகிய சிவஞான போதம் பரஞ்சோதி முனிவரால் மெய்கண்டதேவ நாயனாருக்கு உபதேசிக்கப்பட்டது. முனிவரது கட்டளைப்படி நாயனார் அதைத் தமிழிற் பாடியருளி அதற்கு விளக்கமும் செய்தருளினார்.

உபாகமம் ஆகமத்தின் வழிநூல். பிராமணமும் உபநிடதமும் வேதத்தின் வழி நூல்கள். புராணம் அடியார்கள் சரித்திரத்தையும் கடவுளின் திருவருட் சிறப்பையும் அறிவிற் குறைந்தோரும் விளங்கத்தக்க பான்மை யாகச் சொல்வது. இவைகள் சமய நூலல்லாதவைகள். இவற்றிலுள்ள கொள்கைகள் வேதாகமங்களுக்கு மாறாயின் விலக்கப்பட வேண்டும். (இப்பகுதி திருவருட்பயன் ஐந்தெழுத் தருணிலை 1ஆம் குறளின் விரிவுரையிலிருந்து தொகுக்கப்பட்டது)

இப்போது கிடைக்கும் வேதாகமங்களிற் பெரும்பாலானவை கிரியா காண்டத்தைச் சேர்ந்தவையாகும். வருவாயை நோக்கமாகக் கொண்ட சிலரால் இவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஞான காண்டம் கவனிப்பாரற்ற பொருளாகிவிட்டது. ஞான காண்டத்திலுள்ள ஒரு சில பகுதிகளை மாத்திரம் வைத்துக்கொண்டு அவற்றை முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாது.

கிரியையென மருவுமவை ஞானங் கிடைத்தற்கு நிமித்தமாகு மானாலும் கிரியையினால் மாத்திரம் ஞானத்தைப் பெற முடியாது.

வேதத்தின் ஞானகாண்டத்தைச் சிவாகமத்துக்கு மாறுபடாத வகையில் முழுமையாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால் நாம் தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகங்களையும், சிவாகமத்தின் ஞான காண்டப் பொருளைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் ப·றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது,

உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னுஞ் சித்தாந்த நூல்களையுங் கற்க வேண்டும்.

கிரியை முறைகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்ற சிறந்த அறிவாளிகள் எனக் கருதப்படும் சைவ சமய குருமாரிற் பலரும் சைவ சமய சாத்திரங்களைப் போதிக்க முடியாதவர்களாய் இப்போதிருப்பதற்குக் காரணம் அவர்கள் சித்தாந்த நூல்களைக் கல்லாமையேயாகும்.

“அத்துவாக்களுக் குட்பட்டவர்களாகிய தெய்வங்களையும் மனிதர்களையும் முத்தியடைய வேண்டி வழிபடுகிறவர்கள், உபநிடத வாக்கின்படி குருடரைக் கொண்டு வழிகாட்டுவிக்கும் குருடருக்குச் சமமாவர்” என்கிறார் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்.
(திருவருட்பயன் அருளுரு நிலை 9வது குறளின் விளக்கக் குறிப்பு)

இக்காலத்தில், சைவக் குடும்பங்களிற் பிறந்தும் தம்மைச் சைவ சமயிகளென உறுதிப்படுத்திக் கொள்ளாதோரிற் பலர் சைவ சமயிகளின் வழிபாட்டுக்குரிய தெய்வங்களை வழிபடுவதை விட்டு, சிறு தெய்வங் களையும் பிற மதத்தவரின் வழிபடு தெய்வங்களையும் வழிபட்டுச் சீரழிகின்ற போதிலும் தம்மைச் சைவசமயிகளென்றே கூறுகின்றார்கள் பொருளீட்டு வதையே நோக்கமாகக் கொண்ட சிலர், இவர்களைச் சிறு தெய்வ நெறியிற் செலுத்த முயல்கின்றார்கள்.

அதனால், திருமுறை போற்றுந் தெய்வம் எதென்பதை இவர்களுக் கெடுத்துக் கூறவேண்டியது இன்றியமையாத தாகின்றது. இது காரண மாகவே, சைவத்திருமுறைகளை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் எழுதப் படுகின்றது.

**‘ஐய னேஉனை யன்றி யொருதெய்வங்**
**கையி னால்தொழ வுங்கரு தேன்கண்டாய்**
**பொய்ய னாகிலும் பொய்யுரை யேன்சுத்த**
**மெய்ய னாம்உனக் கேவெளி யாகுமே’** என்று தாயுமானவ சுவாமிகள் உறுதி கூறியது போல, சைவ சமயிகள் ஒவ்வொருவரும் உறுதி பூண்டு அவர்கள் வழிபடுவதற்குரிய தெய்வங்களையே வணங்க வேண்டுமென்று வேண்டுவதுடன் இம் முன்னுரையை நிறைவு செய்கிறேன்.

**ஆ.நடராசா**
25 1/2, ஈ. எஸ். பேணான்டோ மாவத்தை,
கொழும்பு - 06.



உ
சிவமயம்

# வாழ்த்துரை

## சித்தாந்தரத்தினம், சைவசித்தாந்த கலாநிதி
## க. கணேசலிங்கம் அவர்கள்
## ஆதீனப்புலவர், இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்
## தலைவர் சிவத்திருமன்றம் கொழும்பு

சைவ அறிஞர் மட்டுவில் ஆ. நடராசா அவர்கள் எழுதிய **திருமுறை போற்றுந் தெய்வம்** என்னும் நூல் சைவ மக்களின் வழிபடு தெய்வம் சிவன் என்பதை வலியுறுத்துகின்றது. சிறுதெய்வ வழிபாடு சைவத்துக்கு உடன்பாடற்றது என்பதை விளக்குகிறது.

சிவனும், அம்பிகை, கணபதி, முருகன், வைரவர், வீரபத்திரர் ஆகிய சிவ வடிவங்களும், நடராசர், தட்சணாமூர்த்தி போன்ற சிவமூர்த்தங் களுமே சைவர்களின் வழிபடு தெய்வங்கள்.

உயர்தனிச் செம்பொருளாக இறைவனைக் கண்டு சிவன் என்ற பெயராற் போற்றி வழிபடுபவர்கள் சைவத் தமிழர்கள். “செம்பொருட் டுணிவே சிவபெருமானே” என்று மணிவாசகர் போற்றுகிறார். இத்தகைய உயர்தனி முதலாகிய சிவ பரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம்.

“சிவனின் மேல் தெய்வமில்லை, சைவத்தின் மேல் சமயமில்லை” என்பது ஆய்ந்தறிந்து அனுபவத்தில் கண்ட முடிவு. சைவ தத்துவமான சைவ சித்தாந்தம் சிறப்புமிகு உயர்தத்துவமாக உலக அறிஞரால் போற்றப் படுகிறது.

இத்தகைய சிறப்பும் பெருமையும் பாரம்பரியமும் மிக்க சைவ சமயத்தில் வந்தவர்களின் இன்றைய நிலை, பொதுவாக கவலையளிப்பதாக வுள்ளது. தமது சமயம் கூறுவதென்ன? அதன் கொள்கை என்ன? என்பவற்றை அறியாதவர்களாகப் பலர் வாழ்கின்றனர். இந்த நிலையில் சைவத்துக்கு உடன்பாடற்ற கொள்கைகளும் வழிபாடுகளும் சைவர்களிடம் பரப்பப்படுகின்றன. மதமாற்றம் தீவிரமடைகிறது.

சைவத்தைப் பேணவேண்டிய குருமாரும், சைவப் பிரமுகர்கள் சிலரும் தவறான வழியில் தாம் செல்வதோடு சைவர்களையும் தவறான வழியில் - திசையில் திருப்புகின்றனர். சிவனையும் சிவமூர்த்தங்களையும் வழிபட வேண்டிய சைவர்களிடையே சிறு தெய்வ வழிபாட்டை ஊக்குவிக்கின்றனர். இதனால் சைவம் சிதைகிறது, வீழ்ச்சியடைகிறது.

இதனைத் தடுப்பதற்கு சைவ அறிஞர்களும் நிறுவனங்களும் பல வழிகளில் இன்று பணியாற்ற வேண்டியுள்ளது. மட்டுவில் ஆ. நடராசா அவர்கள் இச்சிறு நூலின் மூலம் இத்தகைய பணியை மேற்கொண்டிருக்கிறார். சைவத்தின் தோத்திர நூல்களான பன்னிரு திருமுறைகளை ஆதாரமாகக் கொண்டு, சிறுதெய்வ வழிபாடு தவிர்க்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்.

ஆறுமுகநாவலர், மறைமலையடிகள் போன்றோரின் கருத்துரைகளையுந் தந்து தனது விளக்கத்துக்கு அரண்சேர்க்கிறார்.

சிறுதெய்வ வழிபாட்டைப் புகுத்தும் சமார்த்தர் செயலையும் சுட்டிக் காட்டுகிறார். இந்நூலைப் படிப்பவருக்கு பன்னிரு திருமுறைகள் குறித்த விளக்கமும் ஓரளவு கிடைக்கிறது.

சைவர்கள் சைவத்தைச் சிதைக்கும் அன்னிய, அயல் வழக்கில் விழாமல், பயனற்ற சிறுதெய்வ வழிபாட்டில் காலத்தை வீணே கழிக்காமல், சிவநெறியில் நின்று பயனடைய இச்சிறு நூல் அறிவுறுத்துகிறது. இதன் ஆசிரியர் இதுபோல் மேலும் பல பணிகள் செய்ய வேண்டுமென வேண்டி வாழ்த்துகிறோம். சைவப் பெருமக்கள் இந்நூலைப் படித்துப் பயனடைவார்களாக.

அன்பன்

கொழும்பு. **க. கணேசலிங்கம்**





# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சம்பந்தன் தேவாரம் | 2 |
| திருநாவுக்கரசர் தேவாரம் | 7 |
| சுந்தரர் தேவாரம் | 12 |
| திருவாசகம் | 18 |
| ஒன்பதாந் திருமுறை | 28 |
| பத்தாந் திருமுறை | 35 |
| பதினொராந் திருமுறை | 37 |
| பன்னிரண்டாந் திருமுறை | 43 |

உ

சிவமயம்

சமயங்கள் பல. ஒவ்வொரு சமயத்தவரும் தாம் வணங்குங் கடவுளை ஏதோவொரு பெயரால் அழைக்கின்றனர். ஒவ்வொரு சமயத்தவருக்கும் அவரவருக்குரிய சிறப்பான சமய நூல்கள் உண்டு; சமய தத்துவங்கள் உண்டு. இந்த வகையில் சைவ சமயத்தவர்களின் வணக்கத்துக் குரியவன் சிவன். அவன் பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானே யானாலும் அவனுடைய சிறப்புத் திருநாமம் சிவன் என்பதே யாகும். சைவ சமய நூல்கள் வேத சிவாகமங்கள்.

இவற்றுள் வேதம் பொதுநூல்; ஆகமம் சிறப்பு நூல்.

**"வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்**
**வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்**
**ஆதிநூல் அநாதி அமலன் தரும் நூல் இரண்டும்......"**

என்று சித்தியார் கூற

**"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்**
**ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன**
**நாத னுரையவை........."** என்கின்றார் திருமூலர்.

ஆகமம் சிறப்பு நூலாதலால் வேதங்களிற் கூறப்படும் கருத்துக்களிலுள்ள சந்தேக விபரீதங்களெல்லாம் ஆகமக் கருத்துக்களைக் கொண்டே நீக்கப்படும்.

வேதத்தின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமத்துக்கு மாறுபடா வண்ணம் உள்ளபடி அறிவிக்குந் தமிழ் வேதங்கள் எவை என்னும் வினாவுக்கு, தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம் என விடையெழுதிய நாவலர் அவர்கள், தாமெழுதிய திருத்தொண்டர் பெரியபுராண வசன முகவுரையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் நான்கும் பதி, பசு, பாசமென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை உணர்த்துஞ் சைவ சித்தாந்த சாத்திரத்தின் அநுபவப்பயனாகிய தோத்திர ரூபமாய் இருக்குமென்றும் கூறியிருக்கின்றார்.

இத்தகைய சிறப்புடைய தேவார திருவாசகங்களையும் உள்ளடக்கிய திருமுறைகள் சைவ சமயிகள் வழிபட வேண்டிய தெய்வம் எதென்பது பற்றிக் கூறுவதென்ன?

# சம்பந்தன் தேவாரம்

பொய்கையிலே தேன்சொட்டும் நீலநிறக் குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. இறால் மீன்கள் துள்ளிக் குதித்துப் பாய்வதாற் கிழிந்த குவளைப் புது மலர்களிலிருந்து தேன் சொரிகின்றது. அந்தத் தேனைத் தவளைகள் வாய் நிறையக் குடிக்கின்றன. அக்குளத்து நீர் பாயும் வயல்களிலெல்லாங் குவளை மலர்களின் நறுமணங் கமழுகின்றது. இத்தகைய வளம் பொருந்தியது சீகாழிப் பதி.

சீகாழியில் வாழும் மக்கள் எல்லோராலும் மதிக்கப்படும் குலம் கவுணியர் குலம். கவுணியர் குலத்திற் பிறந்தவர்களிற் சிறந்தவன் சம்பந்தன். அவன் தனது திருக்கரத்திலே வேத மான் மறியேந்தும் சிவபெருமானது திருவடிகளை யன்றி வேறெந்தத் தெய்வத்தையும் வணங்கக் கூடாதென்னுங் கருத்துடையவன். அவன் அச்சிறு பாக்கத்தில் சுந்தரநாயகி அம்மையாருடன் எழுந்தருளியிருக்கும் பாக்கபுரேசுவரர் மீது திருப்பதிகம் பாடியிருக்கிறான். அந்தத் திருபதிகத்தைப் பாடிப் போற்றித் துதிக்கும் அடியார்களது நீக்குதற்கரிய வினைகள் எல்லாம் நீங்கும் என்று கூறுகின்றது திருவச்சிறுபாக்கத் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பு. அது வருமாறு:-

**மைச்செறி குவளை தவளைவாய் நிறைய**
**மதுமலர்ப் பொய்கையிற் புதுமலர் கிழியப்**
**பச்சிற வெறிவயல் வெறிகமழ் காழிப்**
**பதியவ ரதிபதி கவுணியர் பெருமான்**
**கைச்சிறு மறியவன் கழலலாற் பேணாக்**
**கருத்துடை ஞான சம்பந்தன தமிழ்கொண்**
**டச்சிறு பாக்கத் தடிகளை யேத்து**
**மன்புடை யடியவ ரருவினை யிலரே,**

(திருமுறை-1. பண்-குறிஞ்சி)

இவ்வாறு கூறிய சம்பந்தன்,



**"வெய்ய நோயிலர் தீதிலர் வெறிய ராய்ப்பிறர் பின்செலார்**
**செய்வ தேயலங் கார மாமிவை தேறி யின்புறில்**
**ஐய மேற்றுணுந் தொழிலரா மண்ண லாரறை யணிநல்லூர்ச்**
**சைவ னாரவர் சார்வலால் யாதுஞ் சார்கிலோ நாங்களே"**

என்கிறான் (திருமுறை-2,பண்:-காந்தாரம்)

சார்பு மெய்ச்சார்பு, பொய்ச்சார்பு என இருவகைப்படும். மெய்ச்சார்பு சிவன். மற்றையவை யெல்லாம் பொய்சார்புகள். பொய்யை விட்டு மெய்யைச்சார வேண்டுமென்பது இத்தேவாரங் கூறும் அறிவுரை.

மூன்றாந் திருமுறையிலுள்ள பதிகங்களிலொன்று திருவாவடு துறைப் பதிகம் (நாலடி மேல் வைப்பு. பண்:காந்தார பஞ்சமம்) இது சம்பந்தப் பிள்ளையார் தமது தந்தையாருக்குக் கொடுக்கப் பொன் இல்லாமையால் இறைவனைப் பாடிப் பொன் பெற்ற சிறப்பினையுடையது. அது வருமாறு:-

**இடரினும் தளரினும் எனதுறுநோய்**
**தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே**
**இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்**
**அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே.** 1

**வாழினும் சாவினும் வருந்தினும் போய்**
**வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்**
**தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்**
**போழிள மதிவைத் தபுண்ணியனே**
**இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்**
**அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே** 2

**நனவினும் கனவினும் நம்பா உன்னை**
**மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்**
**புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த**
**கனல்எரி அனல்புல்கு கையவனே**
**இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்**
**அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே** 3

தும்மலொ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரியெழ முனிந்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே 4

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தா தென்நா
ஐந்தலை யரவு கொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழலலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே 8



உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மல ரடியலால் உரையாதென் நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றாதென் நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே 10

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலை வல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே. 11

இப்பதிகத்திலுள்ள பாடல்கள் எல்லாம் ஒருவனே தெய்வம் அவனே சிவன் என்னும் சம்பந்தனது கருத்தை வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றன.

இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன், வாழினும் சாவினும் வருந்தினும் போய் வீழினும் உனகழல் விடுவேனல்லேன், நனவினுங் கனவினும் நம்பா உன்னை வழிபடல் மறவேன், தும்மலொ டருந்துயர் தோன்றிடினும் அம்மலர் அடியலா தரற்றா தென்நா, கையது வீழினுங் கழிவுறினும் செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன், வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும் எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென் நா, வெப்பொடு விரவியோர் வினைவரினும் அப்பா உன் அடியலாது அரற்றாதென்நா பேரிடர் பெருகியோர் பிணிவரினும் சீருடைக் கழலலாற் சிந்தை செய்யேன், உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின் ஒண் மலர் அடியலால் உரையாது என்நா, பித்தொடு மயங்கியோர்

பிணிவரினும் அத்தா உன் அடியலால் அரற்றாது என்நா எனச் சம்பந்தன் கூறிய உறுதி மொழிகள், சைவமக்கள் எல்லோருங் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள்.

எமக்கு வறுமை வரும் போதும் பயம் வரும் போதும் நோய் வரும் போதும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழியென்ன வென்று நாம் ஆராய்கின்றோம். யாரிடம் கடன் வாங்கலா மென்றும் எப்படிச் செல்வம் சேர்க்கலாமென்றும் சிந்திக்கின்றோம். எம் மனம் எங்கே போய் ஒளிக்கலாமென்றும் யாரிடம் அடைக்கலம் புகலாமென்றும் எண்ணுகிறது. எந்த வைத்தியரிடம் செல்லலாம் எந்த மருத்துவமனையிற் சேரலாமென்று முடிவெடுக்க முடியாமல் தவிக்கின்றோம். இப்படியான சந்தர்ப்பங்களில் சிலர் எமக்குப் பணந்தரத் தாமாகவே முன்வருகின்றார்கள். சிலர் எமக்கு அடைக்கலம் தருகின்றார்கள். சிலர் எமது நோயை மாற்ற முன்வருகின்றார்கள். இவ்வாறு வலிந்து வந்து பிரதிபலனை எதிர்பாராது எமக்கு உதவுவோர் யாராயிருந்தாலும் அவர்களைப் பாராட்ட வேண்டும். நாம் அவர்களுக்கு நன்றியுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

இவர்களைப் போலன்றிப் பிரதிபலனை எதிர்பார்த்து எமக்கு உதவி செய்ய வரும் இன்னொரு பிரிவினரும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். பிரதி பலனை எதிர்பார்த்து உதவி புரிவோரின் ஒருபிரிவினரே எம்மை, எம்மதத்தவரை மதமாற்றஞ் செய்ய முயல்பவர்கள்.

இவர்களின் முயற்சி காரணமாகத் தாம் வழிபடுந் தெய்வத்தை வணங்குவதை விட்டு, பிற மதத்தினர் வழிபடுந் தெய்வங்களை வணங்குவோர் மதம் மாறியவர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

இவர்களைப் போலன்றி, சுமார்த்தர்கள் கூறும் ஆசை வார்த்தை காரணமாக அறிவு மயங்கிச் சிவனை வழிபடுவதை விட்டுச் சிறுதெய்வங்களையும் சிவனடியார் அல்லாதாரையும் வணங்கும் இன்னொரு பிரிவினரும் இருக்கிறார்கள். இவர்கள் தம்மைச் சைவ சமயிகள் என்று கூறுகின்ற போதிலும் உண்மையில் இவர்களும் மதம் மாறியவர்களே யாவர்.



இவர்களின் நிலைக்குத் தான் தள்ளப்பட மாட்டார் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே, உன்னை வழிபடல் மறவேன் என்றும் செய்கழல் அடியலாற் சிந்தை செய்யேன் என்றும் உன் அடியலால் அரற்றாதென்நா என்றும் சம்பந்தன் சத்தியப் பிரமாணஞ் செய்தான்.
சம்பந்தன் பாடிய மூன்றாந் திருமுறையிலுள்ள இன்னொரு தேவாரம் வருமாறு:-

**பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ**
**விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்**
**கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணனின்**
**அடியலால் அடைசரண் உடையரோ வடியரே**

(திருக்கானப்பேர்,பண்:-கொல்லி)

களிற்றியானை அதிகாலையிற் பிடியெல்லாந் தன்னைத் தொடர்ந்து செல்லச் சென்று குளத்தில் நீராடி, பூக்களைக் கொய்து கையிலே கொண்டு சென்று விதிப்படி வழிபாடு செய்ய, நறுமணங் கமழும் பூஞ்சோலைகளையுடைய கானப்பேரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! அடியார்கள் சரணடைவதற்கு உன்னுடைய திருப்பாதங்களன்றி வேறுமிடமுண்டோ? இல்லை யென்பது இத்தேவாரத்திலுள்ள வினாவுக்குரிய விடை. ஐந்தறிவுடைய யானையே சிவபெருமானை விதியினால் வழிபட்ட தென்பதை அறியும் அடியார்கள் நெறி பிறழ்ந்து சிவ வழிபாட்டைக் கைவிட்டு, பிறதெய்வங்களையும் சிறுதெய்வங் களையும் வழிபடமாட்டார்கள் என்பது சம்பந்தன் கருத்து.

## திருநாவுக்கரசர் தேவாரம்

கடவுள் என்றுமுள்ளவராய் இருப்பது போலவே ஆன்மாக்களும் என்றுமுள்ளவை. கடவுள் இயல்பாகவே மலபந்தம் இல்லாதவர். ஆன்மாக்கள் அநாதியே மலபந்த முள்ளவை. கடவுள் முற்றறிவுடையவர்.ஆன்மாக்கள் சிற்றறிவுடையவை. அறிவிக்க அறிபவை. கடவுள் தம்வயமுடையவர். ஆன்மாக்கள் தம்வயமற்றவை. மலத்தினாற் பந்திக்கப் பட்டிருப்பது காரணமாக ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறந்திறந்து வருபவை. பிறப்பிறப்பிற் படுபவர் எவரும் கடவுளாகார். இது பற்றி ஆதிபுராணக் குறுந்தொகையிற் கூறியிருக்கிறார் அப்பர்.

அத்தனே என்று அரியும் பிரமனும் ஓலமிட்டழைத்துப் போற்றித் துதித்த போதும் அடியும் முடியும் அறியாத படி அவர்களுக்கு முன்னின்ற பேரொளியே, செத்துச் செத்துப் பிறப்பதே தெய்வத்தின் இயல்பென்று கருதி, சிறுதெய்வங்களைப் பக்தி செய்து வழிபடுகின்ற கன்னெஞ்சர்களுக்கு உனது பெருமையை எடுத்துக் கூறினால் அவர்கள் அதைப் புரிந்து கொள்வார்களா? புரிந்துகொள்ள மாட்டார்கள். அதனால் அவர்கள் சிறு தெய்வ நெறிக்கே சென்று சிவனை மறந்து சீரழிகின்றார்கள் என்றெண்ணி அவர்களுக்காக அனுதாபப்படுகின்றார் அப்பர்.

இதுவரை நூறுகோடி பிரமர்களும் ஆறுகோடி நாராயணர் களும் கங்கைக் கரையில் எத்தனை மணலுண்டோ அத்தனை இந்திரர்களும் இறந்து விட்டார்கள். இறவாதிருப்பவன் ஈசன் ஒருவனே.

அந்தத் தெய்வமே உண்மையான தெய்வம். இந்தத் தெய்வமே அதிலும் சிறந்த தெய்வம் என்று கூறித் தமது அறியாமை காரணமாக எதை எதையோ எல்லாஞ் சொல்லி வாதிடும் அறிவிலிகளே! நீங்கள் எவரெவரைத் தெய்வமென்று சொல்லுகின்றீர்களோ, அவர்களுக்கெல்லாந் தேவன் மாதேவனாகிய சிவனொருவனே. அவனை விட வேறொரு தெய்வம் இல்லை யென்றுங் கூறுகின்றார் அப்பர்.

**செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று**
**பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ**
**அத்த னென்றரி யோடு பிரமனுந்**
**துத்தி யஞ்செய நின்றநற் சோதியே.**

**நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்**
**ஆறு கோடி நாராயண ரங்ஙனே**
**ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்**
**ஈறி லாதவன் ஈச னொருவனே.**

**வாது செய்து மயங்கும் மனத்தராய்**
**ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்**
**யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெல்லாம்**
**மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே.**

(திருமுறை-5)



துத்தியஞ் செய- துதிக்க. நொந்தினார்- இறந்தார்.

மனமே! என்னைப் பற்றி நிற்கும் பாவங்களைப் போக்க வேண்டுமானால், மேலான சிவகதிக்குச் செல்ல வேண்டுமானால் என்னைச் சுற்றிச் சூழ்ந்து வருகின்ற தீவினைகளை அழித் தொழிக்க வேண்டுமானால் நான் சொல்வதைக் கேள். புற்றில் வாழ் அரவைக் கச்சாக அணிந்த புனிதனே, சோலைகள் நிறைந்த ஆரூரனே, நீயே எனக்கு உறவுந் துணையுமாவாய். நான் உன்னையன்றி வேறொரு தெய்வத்தை நினைக்கவும் மாட்டேனென்று கூறி அவனைப் போற்றிப் புகழ்வாயாக.

**பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்**
**பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்**
**சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்**
**சொல்லுகேன் கேள்நெஞ்சேதுஞ்சா வண்ணம்**
**உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்**
**உன்னையல்லா லொருதெய்வம் உள்கே னென்றும்**
**புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்**
**பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே.** என்று தன் நெஞ்சுக்குத் தானே அறிவுரை கூறுகின்றார் அப்பர்.

(திருவாரூர். திருத்தாண்டகம்)

“ஆவடுதண்டுறை உறையுந் தேவாதி தேவனே!நான் ஐந்தெழுத்து மந்திரத்தை யன்றி வேறொரு மந்திரத்தை என் நாவினால் உச்சரியேன், உனது அருட் செயல்களை மறக்க மாட்டேன். நாய் போன்றவனாகிய நான் உனது திருவடிகளை எண்ணுவதன்றிப் பிற தெய்வங்களை யெண்ணி அவற்றுக்கு என் வஞ்ச நெஞ்சில் இடங்கொடுக்க மாட்டேன். இவ்வாறாகவும் நாடோறும் நீயென்னைத் துன்பத்துக்கு இருப்பிடமாகக் கொடுக்கின்றாய். அஞ்சேலென்று எனக்கு அருள்புரிகின்றா யில்லை. இன்னும் நான் இவ் வேதனையைப் பொறுக்க மாட்டேன். எனக்கு அருள்புரிவாயாக” என்று இறைவனை வேண்டுகின்றார் திருநாவுக்கரசர்.

**மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்**
**மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்**
**ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்**
**எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்**

மேற்றான்நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே யிடங்கொடுத்து நாளும் நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்ச லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமரரேறே

(திருஆவடுதுறை: திருத்தாண்டகம்)

இவ்வாறு இறைவனை வேண்டிய அப்பர் முன்னாளில் தான் சிவனை மறந்திருந்த தவறை யுணர்ந்து,

பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவும் ஏத்தும் இறைவன் தன்னை
எம்மானை என்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
அண்ணிக்குந் தீங்கரும்பை அரனை ஆதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே

என்று மனம் வருந்திப் பாடுகின்றார்.

(திருப்புள்ளிருக்கு வேளூர் : திருத்தாண்டகம்)

சிவனை **"எத்தேவும் ஏத்தும் இறைவன்"** என்னுஞ் சொற்றொடராற் குறிப்பிடுந் திருநாவுக்கரசர்,

என்றும் நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாருமில்லை
சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார்செறலொழிந்திட்டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை, நண்ணிய, புண்ணியத்துளோமே

என்னும் மறுமாற்றத் திருதாண்டகத்தின் மூலம், சைவ சமயிகள் சிறுதெய்வங்களை வழிபடக் கூடாதென்பதை வலியுறுத்தி அவ்வளவி லமையாது, சிறுதெய்வந் தொழாது சிவனை வழிபடுவதற்கு முற்பிறவிகளிற் புண்ணியனை நண்ணிய புண்ணியம் வேண்டுமென்கின்றார். சிறுதெய்வங்களை வழிபடுவோர் பூர்வ புண்ணியம் இல்லாதவர்கள் என்பது கருத்து.



குரு இலிங்க சங்கமங்களைச் சிவனெனவே கண்டு வழிபட வேண்டும் என்று கூறுகிறது சைவம். அதனால் நெற்றியில் நீற்றையும், உருத்திராக்கத்தையும் அணிந்த சிவனடியார்களைக் கண்டால், அவ்வடியார்களுக்கடியராந் தன்மையை விரும்பி இவர் தேவரோ அவர் தேவரோ என்றையுறாது, அவர்களைச் சிவனெனவே கண்டு வழிபடுவோர், தம் நெஞ்சினுள்ளே சிவன் எழுந்தருளப் பெறுவர் என்கிறார் அப்பர்.

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறம்நினைந்தங்குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

(திருக்கன்றாப்பூர் : திருத்தாண்டகம்)

இலாடம்- நெற்றி,கவராது-பலவழிகளிற் செல்லவிடாது மனத்தை ஒருமைப் படுத்தி.

சிவனடியார் அல்லாதாரை வழிபடுவது சிவ வழிபாடாகாது. அதுதனி மனித வழிபாடு. சிவனடியார் சிவனுக்கன்றி வேறெவருக்கும் அடிமையாதல் இல்லை.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே

என்பது அப்பர் பாடிய மறுமாற்றத் திருத்தாண்டகம்.

# சுந்தரர் தேவாரம்

அப்பரைப் போலவே சிவனடியார் வழிபாடாகிய சங்கம வழிபாட்டுக்கு முக்கியத்துவங் கொடுத்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் திருதொண்டத் தொகையிற் பாடிய பாடல்களில் ஒன்று வறுமாறு:

**வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்**
**மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா**
**எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்**
**ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்**
**நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்**
**நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்**
**அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்**
**ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.**

திருத்தொண்டத் தொகையில், சம்பந்தனுடைய சிறப்பைக் கூறவேண்டுமானால் அவனுக்குச் சிவகாமசுந்தரியம்மையார் திரு முலைப்பால் சுரந்தளித்த செய்தியைக் கூறியிருக்கலாம், அல்லது அவன் செய்த அற்புதங்களில் ஏதாவதொன்றைக் கூறியிருக்கலாம். இருந்த போதிலும் இவற்றிலெதையுங் கூறாமல் **"வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும் மது மலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா எம்பிரான்"** என்னுஞ் சொற்றொடரை அடைமொழியாகக் கொண்டே சம்பந்தனுடைய சிறப்பைக் குறிப்பிடுகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். சிவனை யன்றி வேறொரு தெய்வத்தை வணங்காதிருப்பதே சம்பந்தனுக்குறிய சிறப்பு. அதுவே சைவ சமயிகளுக்குரிய சிறப்புமாகும் என்பது சுந்தரரின் கருத்து.

**நாத்தான் உன்திற மேதிறம் பாது**
**நண்ணிஅண் ணித்தமு தம்பொதிந் தூறும்**
**ஆத்தா னைஅடி யேன்றனக் கென்றும்**
**அளவிறந் தபல தேவர்கள் போற்றும்**
**சோத்தா னைச்சுடர் மூன்றிலும் ஒன்றித்**
**துருவி மால்பிர மன்னறி யாத**
**மாத்தா னைமாத் தெனக்குவைத் தானை**
**வலிவ லந்தனில் வந்து கண்டேனே**

(திருவலிவலம், பண்-தக்கேசி)

என்பது சுந்தரர் பாடிய தேவாரங்களில் ஒன்று.



அண்ணித்து- இனித்து, ஆத்தான்-துணைவன், சோத்தான்- வணக்கத்துக்குரியவன், மாத்தான்- பெருமையுடையவன், மாத்து- பெருமை.

உன்னியல்பையே திறம்பாது கூறுந்தன்மை பொருந்துதலால், உன்னடியவனாகிய என்னாவில் என்றுமே அமுதம் பொதிந்தாற் போன்ற இன்சுவை பிறக்கச் செய்யும் என் துணைவனை, எண்ணற்ற பல தேவர்களாற் போற்றப்படும் வணக்கத்துக் குரியவனை, சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்க ளோடும் கலந்து பிரமனுந் திருமாலும் அறியமுடியாத படி விண்ணையும் மண்ணையும் உருவி நிற்கும் பெருமையுடைய வனை, எனக்குப் பெருமை அளித்தவனைத் திருவலிவலந்தனில் வந்து கண்டு கொண்டேன் என்பது முன்னர்க் கூறப்பட்ட தேவாரத்தின் பொருள். இத் தேவாரத்தில் என் நா உன்னியல்பையே திறம்பாது கூறும் எனக் கூறியதன் மூலம், தான் பிறிதொருவரைப் பாடுவதில்லை என்பதை வெளிப்படை யாகக் கூறுகின்றார் சுந்தரர்.

**மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்**
**பாத மேமனம் பாவித்தேன்**
**பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற**
**வாத தன்மைவந் தெய்தினேன்**
**கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை**
**யூரிற் பாண்டிக் கொடுமுடி**
**நற்ற வாஉனை நான்ம றக்கினும்**
**சொல்லும் நாநமச்சி வாயவே.**

(திருப்பாண்டிக் கொடுமுடி,பண்-பழம் பஞ்சுரம்)

என்னுந் தேவாரத்தில் சுந்தரர் மற்றுப் பற்று என்னுஞ் சொற்றொடரால் உலகப் பொருட்கள் மீது வைக்கும் பற்றை மாத்திரமன்றிச் சிறு தெய்வங்களின் மீது வைக்கும் பற்றையுஞ் சுட்டுகின்றார்.
சீர்- சிறப்பு, பாண்டிக் கொடுமுடி என்பது கோயிலின் பெயர்

**படுவிப்பாய் உனக்கேஆள் பலரையும் பணியாமே**
**தொடுவிப்பாய் துகிலொடுபொன் தோலுடுத் துழல்வானே**
**கெடுவிப்பாய் அல்லாதார் கேடிலாப் பொன்னடிக்கே**
**விடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே**

(திருக்குருகாவூர் வெள்ளடை, பண்-நட்டராகம்)

ஒருவர் ஒருவருக்கே அடிமையாவதன்றி, சமகாலத்திற் பலருக்கு அடிமையாதல் கூடாதென்பது உலகியலில் உணரப் படும் உண்மை. பத்தினி ஒருத்தி பலரோடு கூடிவாழ்வதில்லை. பத்தி நெறியில் நிற்போர் ஒருதெய்வத்தின் மீதே பத்தி செய்வதன்றிப் பல தெய்வங்களைப் பத்தி செய்தல் கூடாது. பலரைக் கூடும் பரத்தை பணத்தின் மீது கண்ணாயிருப்பதன்றிப் பணங்கொடுக்கும் எவரொருவர் மீதும் நிலையான அன்புடையவளாக இருப்பதில்லை. அவளைப் போலவே பல தெய்வ வழிபாடு செய்வோரும் எந்தவொரு தெய்வத்தின் மீதும் உறுதியான பத்தியுடையரல்லர். பத்தி செய்வதற்குரியவன் சிவனே. அவன் மீது பத்தி செய்வதற்கும் அவனருள் வேண்டு மென்பதையே "படுவிப்பாய் உனக்கேயாள்" என்னும் முதலையுடைய தேவாரத்தின் மூலம் உணர்த்துகின்றார் சுந்தரர். தொடுவிப்பாய் - அணியச் செய்வாய். வெள்ளடை என்பது கோயிலின் பெயர்.

**சுரும்பார் விண்டமலர் அவைதூவித் தூங்கு கண்ணீர்**
**அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்பு செய்வன்**
**விரும்பேன் உன்னையல்லால் ஒருதெய்வம் என்மனத்தால்**
**கரும்பா ருங்கழனிக் கழிப்பாலை மேயானே**

(திருக்கழிப்பாலை, பண்-நட்டராகம்)

என்னுந் தேவாரத்தில் விரும்பேன் உன்னையல்லால் ஒரு தெய்வம் என்மனத்தால் என்று கூறி, ஒருவனைப் பற்றி ஓரகத்திருக்கும் தனது மனவுறுதியை வெளிப்படுத்துகிறார் சுந்தரர். அவர்,

**நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்**
**வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற**
**சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளிஉறையும்**
**எந்தாய் உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே**

(திருக்கச்சி மேற்றளி, பண்- நட்டராகம்)

என்னுந் தேவாரத்திலும் பிற தெய்வங்களை வணங்க மாட்டேன் என்னுந் தன் உறுதிப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

நொந்தா-நுந்தாத, தூண்டப்படாத, அவியாத. சிந்தாய் - சிந்தனைக்குரிய பொருளாய் இருப்பவனே.

தொடர்ந்தும் சுந்தரர் பாடிய திருக்காளத்திப் பதிகத்தைப் பார்ப்பது இன்றியமையாத தாகும். அது வருமாறு:



**செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே**
**வண்டா ருங்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே**
**கண்டார் காதலிக்குங் கணநாதனெங் காளத்தியாய்**
**அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே** 1

அண்டம்- பரவெளி, செண்டாடும்- விரைந்து நடக்கும்.

**இமையோர் நாயகனே இறைவாவென் னிடர்த்துணையே**
**கமையார் கருணையினாய் கருமாமுகில் போல்மிடற்றாய்**
**உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்**
**அமைவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே** 2

**படையார் வெண்மழுவா பகலோன்பல் லுகுத்தவனே**
**விடையார் வேதியனே விளங்குங்குழைக் காதுடையாய்**
**கடையார் மாளிகைசூழ் கணநாதனெங் காளத்தியாய்**
**உடையாய் உன்னையல்லால் உகந்தேத்த மாட்டேனே**3

கடை- வாசல்

**மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே**
**குறியே என்னுடைய குருவேயுன்குற் றேவல்செய்வேன்**
**நெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்**
**அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே** 4

**செஞ்சேல் அன்னகண்ணார் திறத்தேகிடந் துற்றலறி**
**நஞ்சேன் நான்அடியேன் நலம்ஒன்றறி யாமையினால்**
**துஞ்சேன் நான்ஒருகால் தொழுதேன்திருக் காளத்தியாய்**
**அஞ்சா துன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே** 5

**பொய்யவன் நாயடியேன் புகவேநெறி ஒன்றறியேன்**
**செய்யவ னாகிவந்திங் கிடரானவை தீர்த்தவனே**
**மெய்யவ னேதிருவே விளங்குந்திருக் காளத்திஎன்**
**ஐயநுன் றன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே** 6

**கடியேன் காதன்மையாற் கழற்போதறி யாதவென்னுள்**
**குடியாக் கோயில் கொண்ட குளிர்வார்சடை எங்குழகா**
**முடியால் வானவர்கள் முயங்குந்திருக் காளத்தியாய்**
**அடியேன் உன்னையல்லால் லறியேன்மற் றொருவரையே** 7

கடியேன்- வன்கண்ணனாகிய நான்.

நீறார் மேனியனே நிமலாநினை யன்றிமற்றுக்
கூறே னாவதனாற் கொழுந்தேயென் குணக்கடலே
பாறார் வெண்டலையிற் பலிகொண்டுழல் காளத்தியாய்
ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே 8

தளிர்போல் மெல்லடியாள் தனையாகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தென்னுள்ளம் புகுதவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக்காளத்தி யுள்ளிருந்த
ஒளியே உன்னையல்லால் இனியொன்றும் உணரேனே 9

காரு ரும்பொழில்சூழ் கணநாதனெங் காளத்தியுள்
ஆரா இன்னமுதை அணிநாவலா ரூரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப் பொன்றிலரே 10

இப்பதிகத்தில் அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே எனவும் காளத்தியுள் அமைவே உன்னை யல்லால் அறிந்தேத்த மாட்டேனே எனவும் உடையாய் உன்னையல்லால் உகந்தேத்த மாட்டேனே எனவும் திருக்காளத்தியுள் அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே எனவும் திருக்காளத்தி யாய் அஞ்சா துன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே எனவும் ஐய நுன்றன்னையலால் அறிந்தேத்த மாட்டேனே எனவும் அடியேன் உன்னையல்லால் அறியேன் மற்றொருவரையே எனவும் ஏறே யுன்னையல்லால் இனி ஏத்த மாட்டேனே எனவும் ஒளியே உன்னையல்லால் இனியொன்றும் உணரேனே எனவும் சுந்தரர் கூறிய கூற்றுக்கள் சைவ சமயிகள் சிந்தித்துச் செயற்படுத்துவதற் குரியன.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூருக்குப்போகக் கருதித் திருவொற்றியூரை விட்டு நீங்கினார். அப்பொழுது சங்கிலியாருக்கு "உன்னை நான் பிரியேன்" என்று கூறிய சபதம் தவறினமையால் அவருடைய கண்கள் இரண்டும் பார்வை இழந்தன. சுந்தரர் சபதம் தவறினமையால் எனக்கிது நிகழ்ந்த தென்றெண்ணிக் குருடு நீங்க வேண்டித் திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பாடினார். அந்தத் திருவொற்றியூர்ப் பதிகத்திலுள்ள பாடல்கள் சில வருமாறு: (பண் - தக்கேசி)



அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கிவீழினுந் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே

கட்ட னேன்பிறந் தேன்உனக் காளாய்க்
காதற் சங்கிலி காரண மாக
எட்டி னால்திக முந்திரு மூர்த்தி
என்செய் வான்அடி யேன்எடுத் துரைக்கேன்
பெட்ட னாகிலுந் திருவடிப் பிழையேன்
பிழைப்ப னாகிலும் திருவடிக் கடிமை
ஒட்டி னேன்எனை நீசெய்வ தெல்லாம்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே

கட்டன்- தீவினையுடையவன் , பெட்டன்- பொய்யன்

மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன்
நெஞ்சி னாரொடு வாழவும் மாட்டேன்
பெற்றி ருந்து பெறாதொழி கின்ற
பேதை யேன்பிழைத் திட்டதை அறியேன்
முற்றும் நீயெனை முனிந்திட அடியேன்
கடவ தென்னுனை நான்மற வேனேல்
உற்ற நோயுறு பிணிதவிர்த் தருளாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே

என்னுந் தேவாரங்களின் மூலம்,

நான் பிழை செய்யாதவனல்ல, பிழையுஞ் செய்பவன். ஆனாலும் உன் திருவடிகளை வணங்கத் தவறமாட்டேன். நான் என்னிலையிலிருந்து தவறி விழுந்தாலும் உன்னுடைய திரு நாமமாகிய நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை யல்லாது வேறெந்த வார்த்தையையும் பேச மாட்டேன்.

உனக்காளாய்ப் பிறந்த, தீவினை யுடையேனாகிய நான்,சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சத்தியத்திலிருந்து

தவறிய பொய்யனானாலும் உனக்காளாந் தன்மையிலிருந்து தவற மாட்டேனெனச் சபதஞ் செய்கின்றேன்.

நான் பிறதெய்வங்களை நினைத்து உன்னை மறக்க மாட்டேன். என் மனம் பிறதெய்வங்களை நினைத்து உன்னை மறக்குமானால், நான் அந்த மனத்தோடு கூடிவாழமாட்டேன் என்னும் உறுதி மொழிகளைக் கூறியிருக்கின்றார் சுந்தரர். கொங்கு நாட்டிலுள்ள திருப்புக் கொளியூரில் முதலை விழுங்கிய சிறுவனை அம்முதலையின் வாயினின்றும் மீட்பதற்காகச் சுந்தர மூர்த்தி நாயனார் அவிநாசியப்பரைப் போற்றிப் புகழ்ந்து பாடிய திருப்பதிகத்திலுள்ளதொரு பாடல் வருமாறு:

**பேணா தொழிந்தேன் உன்னையல் லாற்பிற தேவரைக்**
**காணா தொழிந்தேன் காட்டுதி யேலின்னங் காண்பனான்**
**பூணா ணரவா புக்கொளி யூரவி நாசியே**
**காணாத கண்கள் காட்டவல் லகறைக் கண்டனே**

(பண்-குறிஞ்சி)

உன்னையல்லாற் பிறதேவரைப் பேணாதொழிந்தேன் என்று சுந்தர மூர்த்தி நாயனார் கூறுவதை ஞாபகஞ் செய்து கொண்டு, மாணிக்கவாசக சுவாமிகள் இதுபற்றி என்ன கூறுகின்றார் என்பதைப் பார்ப்போம்.

# திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தில் முதலில் இடம்பெறுவது சிவபுராணம். புராணம்- பழைய வரலாறு. சிவபெருமான் ஆன்மாக்கள் உய்தி கூடும் பொருட்டியற்றும் அருட்செயல்களைப் பற்றிக் கூறுவது இப்பாடல்.

**"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க"** என்பது சிவபுராணத்தின் முதலடி. சிவபெருமானது நாமமும் நமசிவாய, அவனைப் போற்றும் மந்திரமும் நமசிவாய.
தாள்- திருவருள், சிவசக்தி.

சிவபுராணத்தின் இரண்டாவது அடி **"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"** என்பது. நெஞ்சு- மனம்.



மனம் கணத்துக்குக் கணம் ஒன்றை விட்டொன்றைப் பற்றும் இயல்புடையது; ஒருநிலையில் நில்லாதது. அதனால் அது எந் நேரமும் ஒன்றையே பற்றி நிற்கமாட்டாது.

மாணிக்கவாசக சுவாமிகள் எல்லாப் பற்றுக்களையும் விட்டுச் சிவன் ஒருவனையே பற்றி நின்றவர். அதனால் அவருடைய மனம் எந்நேரமும் சிவனையே பற்றி நின்றது. எவரொருவர் தன்னை அன்பு செய்கின்றாரோ அவ்வன்பையே இடமாகக் கொண்டு நிற்பவன் இறைவன். இதனையே **"நேயத்தே நின்ற நிமலன்"** என்று கூறுகின்றது சிவபுராணம்.

உலக வாழ்வை மேற்கொண்டிருக்கும் நாம், எமது தேவைகள், எம்முடைய சமூக வளர்ச்சி, நம் நாட்டு அரசியல் விடயங்கள் முதலியவற்றிலிருந்து முற்றாக விலகியிருக்க முடியாது. நமது சிந்தனை, பேச்சு, செயல் முதலியவை அறத்தை அடிப்படையாகக் கொண்டு சிவசிந்தனையோடுங் கூடி அமையுமானால் அதுவே போதும். இவ்வறத்தின் பயனால் என்றாவதொரு நாள் எமக்குத் தெய்வத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும். அப்போதும் நாம் எத்தனையோ தடைகளை எதிர் நோக்க வேண்டி வரும்.

கடவுளுண்டென்னும் எண்ணமுண்டாகி ஒருகாலமும் வெறுக்கப் படாத பேரின்பமாகிய வீடுபேற்றை அடையக் கருதுதலும் மயக்கஞ் செய்ய வல்ல ஆறுகோடி உலக ஆற்றல்கள் தனித்தனி என்னை மயக்குதற் குரிய சூழ்ச்சிகளைச் செய்யத் தொடங்கின. என்மேல் அன்புடையவர்களும், அயலவர்களுங் கூடிக் கடவுளை நினையாதிருக்கும்படி செய்வதற்காக, நாத்திகம் பேசிப்பேசித் தம் நாவில் தழும்பேறப் பெற்றனர்.

பற்றுக் காரணமாகப் பிறவிகள் தோறும் என்னைத் தொடர்ந்து வருகின்ற சுற்றத்தார் மேலும் மேலுங் கூடிப்பதறி என்னைப் பிடித்திழுக்கத் தொடங்கினர். விரதமிருத்தலே மேலான சாதனை யென்பதை மெய்ப்பித்தற் பொருட்டு வேதியர் நூற் பிரமாணங்களைக் காட்டினர். சமய வாதிகள் தத்தம் சமயத்தினாலேயே இறைவனது அருளைப் பெறமுடியுமென்று உரத்துக் கூறி ஒருவரோடொருவர் எதிர் வாதம் புரியத் தொடங்கினர்.

**"மாயாவாதமென்னும் வலிய சுழல் காற்றுச் சுழிகளை யுண்டாக்கி மோதி ஆரவாரித்தது. உலகாயதமென்னும் ஒளி பொருந்திய வலிய நச்சுப் பாம்பு பல்வேறு கலைகளுக் கூடாகத் தனது தீய கருத்துக்களைப் புகுத்துவதற்குச் செய்த சூழ்ச்சிகள் என்னைச் சூழ்ந்து கொண்டன"** என்று கூறிய மாணிக்கவாசக சுவாமிகள் கன்றினையுடைய பசு அதைக் காணாத போது கதறிப் பதைப்பது போலப் பதைபதைத்து மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது சிவனை வணங்கிப் போற்றித் துதித்துப் பாடியது போற்றித் திருவகவல். அதில் ஒருபகுதி வருமாறு:

**"தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி**
**முனிவி லாததோர் பொருளது கருதலும்**
**ஆறுகோடி மாயா சக்திகள்**
**வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின**
**ஆத்த மானார் அயலவர் கூடி**
**நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்**
**சுற்ற மென்னும் தொல்பசுக் குழாங்கள்**
**பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்**
**விரத மேபர மாகவே தியருஞ்**
**சரத மாகவே சாத்திரங் காட்டினர்**
**சமய வாதிகள் தத்தம் மதங்களில்**
**அமைவ தாக அரற்றி மலைந்தனர்**
**மிண்டிய மாயா வாத மென்னுஞ்**
**சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து**
**உலோகா யதனெனு மொண்திறற் பாம்பின்**
**கலாபே தத்த கடுவிட மெய்தி**
**அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்.........**
**மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது.....போற்றி"**

ஒருவருக்குத் தெய்வத்தைப் பற்றிய சிந்தனை ஏற்படும் போது அவர் வாழுஞ் சூழலும் பல்வேறு சமயவாதிகளும் அவரது மனத்தை மாற்ற எவ்வாறு முயற்சிப்பர் என்பதையும் அவர்களுக்கு வசப்படாமல், சிறுதெய்வங்களைத் தொழாமற் சிவனையே பற்றி நிற்க வேண்டு மென்பதையும் வலியுறுத்துகின்றது இப்பாடற்பகுதி.

உத்தமனே, இறைவா! என் குடிகெடினும் இந்திரன், திருமால், பிரமன் முதலியவர்களுடைய பதவிகளை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். உனது திருவுளக் கருத்தின்படி இருக்கப்



பெறின் நரகத்துக்குப் போகவேண்டுமானாலும் அந்நரகத்தை இகழமாட்டேன். உன்னடியாரோ டன்றிப் பிறரோடு நட்புச் செய்ய மாட்டேன். உன்னையொழிய வேறொரு தெய்வத்தை நினைக்கவும் மாட்டேன். என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

**"கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்**
**நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்**
**எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின் இறைவா**
**உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே"**

(திருச்சதகம் மெய்யுணர்தல்)

நள்ளேன்- நட்புக் கொள்ள மாட்டேன்.

தேனெடுப்பதற்காக மலர்களை நோக்கிப் பறக்கும் வண்டுக்கு அவற்றை நாடிச் செல்வதைவிட்டு, பேரானந்தத் தேனிருக்கும் ஈசன் திருவடி மலர்களுக்கே சென்றூதும்படி கூறுவது போல, அங்குமிங்கும் அலைந்துதிரியும் தன் மனத்துக்கு அவ்வாறு செல்லுதலை விட்டு இறைவனிடம் செல்லுமாறு அறிவுறுத்துவது திருக்கோத்தும்பி. அதிலொரு பாடல் **"அரச வண்டே, அந்தத் தேவனே கடவுளாவான். இல்லை இல்லை அவரே கடவுளாவர்"** என்று, கடவுளல்லாதாரைக், கடவுளென்று பொய்கூறிப் புலம்புகின்ற இப்பூமியிலே, பற்றுக் கோடெதுவுமின்றி, என் உலகப் பற்று நீங்கும்படி நான் உறுதியாகப் பற்றிநின்ற மெய்ப் பொருளாகிய தேவாதி தேவனுடைய திருவடிக்கே சென்று நீ ஊதுவாயாக, என்று கூறுகின்றது. அப்பாடல் வருமாறு:

**அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்கன்**
**பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே**
**பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற**
**மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.**

இப்பாடலில் மாணிக்கவாசக சுவாமிகள் பொய்த்தேவு என்று பொதுப்படக் கூறினாரே தவிர, அத்தெய்வங்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆனாலும் நல்லை நகர் ஆறுமுக நாவலர் மனிதர்களைப் போலவே பிறந்தும்,இறந்தும் உழலுகின்ற தேவர்களைப் பரம்என்று கொள்வது சைவ சமயத்துக்கு முற்றும் விரோதம் எனவும் சைவ சமயிகள் என்று பெயரிட்டுக் கொண்டு அநேக மூடர்கள் உயிர்ப்பலி ஏற்கின்ற துட்டதேவதைகளையும் காடன்,மாடன், சுடலை மாடன், காட்டேறி மதுரைவீரன், கறுப்பன், பதினெட்டாம்படிக் கறுப்பன், சங்கிலிக் கறுப்பன், பெரியதம்பிரான்,

முனி, கண்ணகி, பேய்ச்சி, முதலான வர்களையும் வணங்கு கின்றார்கள், என்றும் கூறி வருந்தினார். நாவலர் இன்றிருந்தால் இப்பட்டியலிற் கூறப்பட்ட வழக்கற்றுப் போன சில பெயர்களை நீக்கிவிட்டு,இக்காலத்தில் தம்மை இந்துக்கள் என்று கூறுவோரிற் சிலரால் வணங்கப்படும் புதிய தெய்வங்களின் பெயர்களைத் தமது பட்டியலிற் சேர்த்திருக்கக் கூடும்.

திருக்கோத்தும்பியைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய அச்சப்பத்திலுள்ள பாடல்களைப் பார்ப்போம்.

புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 1

வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பி ரானாம்
திருவுரு அன்றி மற்றோர்
தேவரெத் தேவர் என்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 2

வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கை யார்கடைக் கணஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி
அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 3



கிளியனார் கிளவி அஞ்சேன்
அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகி
தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 4

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன்
தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 5

வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலாம் நீற்றன் ஏற்றன்
சொற்பதங் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 6

தகைவிலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப்
பொலிந்தவம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை
முன்னவன் பாத மேத்தி
அகம்நெகா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 7

தறிசெறி களிறும் அஞ்சேன்
தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 8

மஞ்சுலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும்
நம்பிரான் எம்பி ரானாய்ச்
செஞ்சவே ஆண்டு கொண்டான்
திருமுண் டம்தீட் டமாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 9

முண்டம்- நெற்றி ,திரு- செல்வம்,மேலான செல்வம் விபூதி

கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 10

அச்சப்பத்திலுள்ள பாடல்களில்,மற்றும் ஓர் தெய்வந்தன்னை உண்டென நினைந்து எம்பெம்மாற் கற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே என்றும் ,மற்றோர் தேவரெத் தேவரென்ன அருவராதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே என்றும், என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருகமாட்டா அன்பிலாத வரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே என்றும், வெண்ணீறாடும் மேனியனாகிய சிவபெருமானது பாதங்களை யடைந்து கண்ணீர் சிந்தித் தொழுது அழுது மனமுருகும் அன்பில்லாதவரைக் கண்டால் அஞ்சுவேனென்றும், திருமால் நிலத்தைப் பிளந்து



சென்றுங் காணாத சேவடி பரவி வெண்ணீ றணிகிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே என்றும், அப்பன் தாள தாமரைகள் ஏத்தித் தடமலர் புனைந்து நையும் ஆளலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே என்றும் முன்னவன் பாதம் ஏத்தி அகம் நெகாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே என்றும், அப்பன் கழல்கள் ஏத்திச் சிறந்தினிதிருக்க மாட்டா அறிவிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே என்றும், திருமுண்டம் தீட்ட மாட்டா தஞ்சுவாரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே என்றும், நீணிலா அணியினானை ஏத்தமாட்டா ஆணலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே என்றும் மாணிக்க வாசக சுவாமிகள் கூறிய கூற்றுக்கள் சைவ சமயிகள் ஒவ்வொருவரதும் சிந்தனைக் குரியன.

எமக்கு அச்சந்தருவன பலவுண்டு. அவற்றுக்கெல்லாம் நாம் அஞ்சத் தேவையில்லை. சிவநெறியில் உறுதியாக நிற்காதவர் களைக் கண்டால், அவர்களுக்கே நாம் அஞ்ச வேண்டுமென்பதை மாணிக்க வாசக சுவாமிகள் அச்சப் பத்தின் மூலம் வலியுறுத்து கின்றார்.

இதுபற்றிப் புறச்சந்தான பரம்பரையின் முதல்வர், சிவஞான போதந்தந்த மெய்கண்டார் கூறுவதென்ன?

மெஞ்ஞானம் பெற்று,மலக்குற்றம் நீங்கி இனிப்பிறவிக் கிடமின்றி வாழ்ந்து கொண்டிருப்பவர் சீவன் முத்தர் எனப்படுவர். சீவன் முத்தர்கள் அவர்களுடைய உடம்பழிந்தவுடன் முத்தியடைவர்.

பெருங்காயம் முழுவதையும் எடுத்தபின்பும் அதிருந்த பாத்திரத்திற் பெருங்காய வாசனை வீசுவது போல, முத்திய டையும் வரை உடம்போடு கூடிவாழும் சீவன் முத்தரையும் சிலவேளைகளில் பழைய மலவாசனை மெல்லிதாக வந்துதாக் கவுங் கூடும். அத்தாக்கம் நிகழாதிருப்பதற்காக அவர்களுக்கும் சிவனடியாரோடிணக்கமும் திருவேட சிவாலய சேவையும் வழிபாடும் வேண்டப்படும்.

அதனால், சிவஞானபோதப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்தில்,

**"இனிசிவபத்தர்களோடிணங்க வென்றது"** என்பதை மேற்கோளாகக் கூறிய மெய்கண்டார் அதற்கு,

**"அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவா ராகலான்"** என்பதை ஏதுவாகக் கூறியிருக்கின்றார்.

சிவபத்தரல்லாதார் மெய்ஞ்ஞானிகளுக்கே அஞ்ஞானத்தை உண்டுபண்ணுவாரெனின் அவர்கள் சாதாரண மக்களை விட்டு வைப்பார்களா? இல்லை, அதனால், சிவவழிபாட்டை விட்டுச் சிறுதெய்வங்களை வழிபடுவோரோ டிணங்காதிருத்தல் வேண்டுமென்பது மெய்கண்டாரின் கருத்து.

தொடர்ந்து, இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் மாணிக்க வாசக சுவாமிகள் பாடிய சில பாடல்களைப் பார்ப்போம்.

**பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்**
**ஒருவரை ஒன்றுமிலா தவரைக் கழற்போ திறைஞ்சித்**
**தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனார்**
**ஒருவரை யன்றி உருவறி யாதென்றன் உள்ளமதே.**

(திருப்பாண்டிப்பதிகம்)

வரை- மலை, கழற்போது-பாதமலர், பரி-குதிரை

**பச்சைத்தால் அரவாட்டி படர்சடையாய் பாதமலர்**
**உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்**
**டெச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோஎன்**
**சித்தத்தா றுய்ந்தவா றன்றேஎம் பரம்பரனே**

(திருவேசறவு)

தால் - நா, எச்சத்தார் - குறைபாடுடையோர், எச்சம்-குறை

**கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்**
**மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்**
**துற்றிறுமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்**
**பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே.**

(திருவேசறவு)

ஞானம்- ஞான நூல்கள்.



**நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்**
**சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்**
**குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்**
**கறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே**

(அச்சோப்பதிகம்)

நெறி-நன்நெறி, வீடடையும் வழி, குறி-பெயர் வடிவு முதலிய அடையாளங்கள்

இந்த மணிவாசகங்களில் பரிமேற் கொண்ட சேவகனார் ஒருவரையன்றி உருவறியாதென் னுள்ளமென்றும் சிறுதெய்வம் ஏத்தாதே யுன்திறம் நினைந்தே உய்ந்த வாறன்றே யென்றும், கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும் அறியேன் பிறதெய்வம் என்றும், நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச் சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம் தன்கூத்தை அறியும் வண்ணம் எனக்கருளிய கூத்தன் என்றும் கூறியதன் மூலம், தான் சிறுதெய்வந் தொழாது சிவனையே வழிபட்டு அவனருள் பெற்ற செய்தியைப் பெருமையுடன் குறிப்பிட்டிருக்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

திருவாசகம் ஓதுவோர் ஓரளவுக்காவது அதனைப் பொருளறிந்து ஓதுவது நன்று.

**சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்**
என்கிறது சிவபுராணம்.

திருவாசகத்தின் பொருளறியாதவர்கள் அதை அறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும். அறிந்த பின் அறிந்தபடி ஒழுகவேண்டும்.

**"கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"** என்றும்

**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"** என்றும் கூறுகின்றார் வள்ளுவர். வாலறிவு- மெய்யுணர்வு.

சைவ சமயிகள் திருவாசகம் கூறுகின்றபடி ஒழுகுவார் களேயானால் அவர்கள் சிறுதெய்வந் தொழமாட்டார்கள். ஆனாலும் அவர்களைச் சிறுதெய்வங்களை வழிபடச்செய்வதற்குச் சிறுதெய்வ வழிபாட்டின் மூலம் வயிற்றுப் பிழைப்பு நடத்தும்

சுமார்த்தர்கள் முயற்சித்துக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில். சைவசமயிகள் இந்த நயவஞ்சகர்களின் வலையில் விழக்கூடாது.

இது தொடர்பாக, மாணிக்கவாசக சுவாமிகள் அச்சப்பத்திற் கூறிய அறிவுரைகளை மீண்டும் மீண்டும் எமது கருத்தில் இருத்து வோம்.

**"தரையில்வளர் வினைமுழுதும் வரினுமஞ்சேன்**
**சிவசமயத் தவஞ்சா ராதா**
**ரருகின்வரக் காண்கின்மன மஞ்சுமென**
**விகழ்ந்துரைத்த லச்சப் பத்தாம்"** என்கிறது திருவாசக உண்மை.

# ஒன்பதாந் திருமுறை

ஒன்பதாந் திருமுறையில் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் இடம்பெறுகின்றன. இவை சைவ சமயிகள் வழிபடவேண்டிய தெய்வம் பற்றி என்ன கூறுகின்றனவென்று பார்ப்போம்.

திருவிசைப்பாப் பாடியவர்களில் ஒருவர் திருமாளிகைத் தேவர். இவர் திருவாவடுதுறையில் அரசமர நிழலிலிருந்து தவஞ்செய்தவ ரென்றும் சைவ சித்தாந்த நூல்களைக் கற்றறிந்த வித்தகரென்றும் சைவசமயத்தைப் போற்றி வளர்த்தவரென்றும் பல அற்புதங்களைச் செய்தவரென்றுங் கூறப்படுகின்றது. அதனால் முதலில் திருமாளிகைத் தேவரின் கருத்தை நோக்குவோம்.

சிவநெறியினின்றுந் திரம்பி பிறந்திறந்துழலுஞ் சிறுதெய்வ நெறியிலே சென்று செய்வதென்னவென்றறியாமல் திகைக்கின்ற எனது திகைப்பை நீக்கிப் பொன்னும் மின்னும் போலப் பேரொளி விளங்குந் திருவடிக்கீழ் என்னை இருக்க வைத்த ஒப்பிலா மணியே! அறத்துறைகள் பலவற்றையுமறிந்து செயற்கரிய தவஞ் செய்த சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்பவர்களை ஆட்கொள்ள வேண்டிக் கல்லாலின் கீழ்க் குருமூர்த்தங் கொண்டெழுந் தருளியிருந்த அம்பலத்தரசே! புறச் சமயங்களாகிய சமண பௌத்தப் பொய்களைக் கண்டு காட்டியவனே. நான் உன்னோடு கலக்கும் பொருட்டு நீ என்னோடு கலந்தருள்



வாயாகவென்று இறைவனை வேண்டுகின்றார் திருமாளிகைத் தேவர்.

**திரம்பிய பிறவிச் சிறுதெய்வ நெறிக்கே**
**திகைக்கின்றேன் றனைத்திகை யாமே**
**நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்**
**நிகழ்வித்த நிகரிலா மணியே**
**அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்**
**ஆலின்கீ ழிருந்தவம் பலவா**
**புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்**
**தொண்டனேன் தொடருமா தொடரே.**

(கோயில். பண் : பஞ்சமம்)

என்பது திருமாளிகைத் தேவர் பாடிய திருவிசைப்பா.

**திருநீ றிடாவுருத் தீண்டேன் என்னும்**
**திருநீறு மெய்த்திரு முண்டத்திட்டுப்**
**பெருநீல கண்டன் திறங்கொண் டிவள்**
**பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்**
**வருநீ ரருவி மகேந்தி ரப்பொன்**
**மலையின் மலைமக ளுக்கருளுங்**
**குருநீ என்னும் குணக்குன்றே என்னும்**
**குலாத்தில்லை யம்பலக் கூத்தனையே**

(கோயில் பண் : பஞ்சமம்)

முண்டம் - நெற்றி.

அம்பலக் கூத்தன் மீது ஆராத காதல் கொண்டும் அவனைக் கூடப்பெறாத தன் புதல்வியின் நிலையைக் கூறுவதாகத் திருமாளிகைத் தேவராற் பாடப்பட்டது இப்பாடல்.

என்மகள் நெற்றியிலும் மேனியிலும் நீறணிந்து, திருநீலகண்டப் பெருமானைத் தன் மனத்தினால் உறுதியாகப் பற்றிக்கொண்டு பெருந் தெருவழியே பிதற்றிக்கொண்டு திரிகின்றாள். தில்லையம்பலக் கூத்தனை நோக்கித் திருநீறிடாவுருவைத் தீண்டமாட்டே னென்கின்றாள். அருவிகள் பாயும் பொன்மயமான மகேந்திர மலையிலிருந்து மலைமகளுக்கு ஆகமப் பொருளை யுணர்த்திய குரு நீ என்கின்றாள். குணக்குன்றே என்கிறாள் என்பது இவ்விசைப் பாவின் பொருள்.

திருமாளிகைத் தேவர் பாடியதொரு பதிகம் இணங்கிலா வீசன் என்னுந் தலைப்பையுடையது. அது வருமாறு.

இணங்கிலா ஈசன் நேசத்து
இருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள் சீர்த்தில்லை வாணன்
மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறில்
கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 1

எட்டுரு விரவி என்னை
ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங் கலங்கற் றில்லை
வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்
தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 2

அருட்டிரள் செம்பொற் சோதி
அம்பலத் தாடு கின்ற
இருட்டிரள் கண்டத் தெம்மான்
இன்பருக் கன்பு செய்யா
அரட்டரை அரட்டுப் பேசும்
அழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 3

துனுக்கென அயனும் மாலும்
தொடர்வருஞ் சுடராய் இப்பால்
அனுக்கருக் கணிய செம்பொன்
அம்பலத் தாடிக் கல்லாச்
சினுக்கரைச் செத்தற் கொத்தைச்
சிதம்பரைச் சீத்தை ஊத்தைப்
பினுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 4



திசைக்குமிக் குலவு சீர்த்தித்
தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடும்
நமர்களை நணுகா நாய்கள்
அசிக்கவா ரியங்க ளோதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 5

ஆடர வாட வாடும்
அம்பலத் தமிர்தே என்னும்
சேடர்சே வடிகள் சூடத்
திருவிலா வுருவி னாரைச்
சாடரைச் சாட்கை மோடச்
சழக்கரைப் பிழக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 6

உருக்கியென் உள்ளத் துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச்
செல்வன்பாற் செல்லும் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 7

செக்கரொத் திரவி நூறா
யிரத்திரள் ஒப்பாம் தில்லைச்
செக்கரம் பலவ ரென்னும்
சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்ட மிண்ட
எத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 8

எச்சனைத் தலையைக் கொண்டு
செண்டடித் திடப மேறி
அச்சங்கொண் டமர ரோட
நின்றவம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 9

விண்ணவர் மகுட கோடி
மிடைந்தொளிர் மணிகள் வீசும்
அண்ணலம் பலவன் கொற்ற
அரசனுக் காசை இல்லாத்
தெண்ணரைத் தெருளா வுள்ளத்
திருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 10

சிறப்புடை யடியார் தில்லைச்
செம்பொன் அம்பலவற் காளாம்
உறைப்புடை யடியார் கீழ்க்கீழ்
உறைப்பர்சே வடிநீ றாடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 11

தில்லைக்கரசன் சிவனைச் சேராத துட்டரையும் தீமைகளை இல்லாமற் செய்யவல்ல திருவெண்ணீற ணியாதவர்களையும் சிவனடியார்களுக் கடியராந் தன்மையினால் அவர்களோ டிணங்காதவர்களையும் புத்தர் முதலிய புறச்சமயத்தவர்களையும் பசு நூல்களையே கற்கும் பிச்சரையும் என் கண்கள் காணா, அப்பேய்களோடு என் வாய் பேசாதென்னும் திருமாளிகைத் தேவரின் கூற்றுக்கள், அவர் சிவனொருவனையே உறுதியாகப் பற்றிநின்றார் என்பதைப் புலப்படுத்துகின்றன. சிவனொருவனே பக்தி செய்வதற்குரியவன்.



சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவின்போது, திருப்பல்லாண்டு பாடி, பலர் கூடியிழுக்கவுந் தன் இருப்பிடத்தி லிருந்தசையாது நின்ற திருத்தேரைத் தானாகவே ஓடிச்சென்று இருப்பிடத்தை அடையும்படி செய்தவர் சேந்தனார்.

இத்தெய்வ நெறிநன் றென்று இருள்மாயப்
பிறப்பறா இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா தவமும்
அறிவரோ அறிவுடை யோரே. (திருவீழிமிழலை பண் : பஞ்சமம்)

என்பது சேந்தனார் பாடிய இசைப் பாக்களிலொன்று.

இந்திரசாலங் காட்டுவது போலப் பிறந்திறந் துழலும் ஆன்மாக்களைக் கடவுளென்று காட்டி, எம்மை அவற்றை வழிபடச் செய்வோரின் நெறி பொய்த் தெய்வநெறி. அந் நெறியில் என்னைப் புகவிடாது செய்த பழையோனும் சிந்தாமணியுமாகிய சிவனது சமயநெறி மெய்த் தெய்வநெறி. அந்நெறியில் நிற்கும் நான்மறையோர் வாழுந் திருவீழிமிழலையில் விண்ணிழி செழுங் கோயிலிற் கோயில் கொண்ட, மெய்த்தெய்வ நெறியினாற் போற்றப்படும் சிவனையல்லது அறிவுடையோர் பொய் நெறியினாற் போற்றப்படுந் தெய்வங்களையும் வழிபடுவரோ? வழிபடமாட்டார் என்பது இந்தத் திருவிசைப்பாவின் பொருள்.

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே
(கோயில் பண் : பஞ்சமம்)

என்பது சேந்தனாராற் பாடப்பட்ட பதின்மூன்று பல்லாண்டுப் பாடல்களில் ஒன்று. இப்பாடல் சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர் சிறுநெறி சேராமே விடைப்பாகனாகிய சிவனையே வணங்கும்படி அறிவுரை கூறுகின்றது.

தஞ்சை இராசஇராசேச்சரத்துப் பெருவுடையாருக்கு அட்ட பந்தன மருந்தைப் பலமுறை சாத்தவும் அது இறுகாமல் இருந்ததை அறிந்த கருவூர்த் தேவர், எம்பெருமானை வழிபட்டு அட்ட பந்தன மருந்தை இறுகச் செய்து, பெருவுடையாரை நிலை நிறுத்தினரென்பது வரலாறு. ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டிற் பத்துப் பதிகங்கள் கருவூர்த் தேவராற் பாடப்பட்டவை. அவற்றில் ஒரு பாடல் வருமாறு.

**அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே**
**அன்பொடு தன்னையஞ் செழுத்தின்**
**சொற்பதத் துள்வைத் துள்ளம் அள்ளூறும்**
**தொண்டருக் கெண்டிசைக் கனகம்**
**பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்**
**பவளவா யவர்பணை முலையும்**
**கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே.**

(கங்கை கொண்ட சோளேச்சரம். பண் : பஞ்சமம்)

சிவனைப் போன்ற அற்புதத் தெய்வம் வேறுமுண்டோ என வினாவும் இப்பாடல் அவன் தன்னை வழிபடுவோருக்குப் பேரின்பத்தை மாத்திரமல்ல, இம்மை இன்பங்களையுந் தருவானென்று கூறுகின்றது.

**உடையும் பாய்புலித் தோலும்நல்**
**அரவமும் உண்பதும் பலிதேர்ந்து**
**விடைய தூர்வது மேவிடங்**
**கொடுவரை யாகிலு மென்னெஞ்சம்**
**மடைகொள் வாளைகள் குதிகொளும்**
**வயற்றில்லை யம்பலத் தனலாடும்**
**உடைய கோவினை யன்றிமற்**
**றாரையு முள்ளுவ தறியேனே.**

(கோயில். பண் : நட்டராகம்)

இவ்விசைப்பா வைணவ அந்தணர் குடியிற் பிறந்து சிவபக்தியில் ஈடுபட்டுச் சைவராக மாறிய திருவாலியமுதனாராற் பாடப்பட்டது. இப்பாடலில் 'தில்லையம்பலத்து அனலாடும் உடைய கோவினை யன்றி மற்று ஆரையும் உள்ளுவது அறியேனே' என்று திருவாலியமுதனார் கூறியிருப்பதைச் சைவசமயிகள் ஒவ்வொருவருங் கருத்திற்கொள்ள வேண்டும்.



# பத்தாந் திருமுறை

பன்னிரு திருமுறைகளில் முதல் ஒன்பதுந் தோத்திரங்கள். (திருக்கோவை யாரைத் தவிர) பத்தாந் திருமுறை எனப்படுந் திருமந்திரம் சாத்திரம். பதினொராந் திருமுறையில் இடம்பெறும் பாடல்கள் பிரபந்தங்கள் எனப்படுகின்றன. பன்னிரண்டாந் திருமுறை புராணம். இவற்றில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் களையும் பற்றிக் கூறும் சாத்திர நூலாகிய திருமந்திரம் பதியைப் பற்றிக் கூறுஞ் சில கருத்துக்களைப் பார்ப்போம்.

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லை நும்சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே** என்கின்றது ஒரு மந்திரம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிறது புறநானூறு. கேளிர் - உறவினர். யாவரும் உறவினரானால், யாவரும் ஒரு குலத்தவரே யாவர். இக் கருத்தோடொத்துத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் ஒன்றே குலம் என்று கூறுகின்றது.

உயிர்கள் பலவாயிருப்பது போல, கடவுள் பலர் இல்லை. இறைவன் ஒருவனே. அவ்விறைவனை நாணுதலின்றி நன்றாக நினைத்து வழிபடுங்கள். அவனை வழிபட்டால் உங்களுக்கு மரணம் இல்லையாகும். பிறந்தோர் இறப்பது உறுதி. அதனால், இறவா திருப்பதற்குப் பிறவாதும் இருக்க வேண்டும். பிறப்பிறப்பிலிருந்து விடுபட்டு வீடு பேறடைவதைத் தவிர ஆன்மாக்களுக்கு வேறு கதியில்லை. வீடுபேறடைய வேண்டுமானால் உங்கள் சிந்தையில் நின்று நிலைபெறுமாறு இறைவனை நன்றாகச் சிந்தியுங்கள் என்பது இந்த மந்திரத்தின் பொருள்.

ஆன்மாக்களுக்குப் பிறப்பிறப்பற்ற பெருவாழ்வைக் கொடுப்பதற்கு, தனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லாத ஒரு தெய்வத்தாற்றான் முடியும். பிறப்பிறப்பில்லாதவன் சிவன் ஒருவனே. சைவ சமய சாத்திர தோத்திர நூலெதுவும் சிவன் இறந்தா னென்றோ பிறந்தானென்றோ கூறவில்லை. அப்படிக் கூறியிருந்தால் அந்நூல் எதென்று கூறுங்கள்.

கடவுள் இறந்தானென்றும் பிறந்தானென்றுங் கூறும் வேறு சில சமய நூல்கள் உண்டு. பிறப்பிறப்பிற் படுவன யாவும் உயிர்கள். அதனால், பிறந்திறந்த வரலாறுடையவர்களைக் கடவுளென்று கருதி வழிபடுவதை விட்டு விடுங்கள். நாம் இறந்த பின் பருந்துகளுக் குணவாகக் கூடிய இவ்வுடற்பற்றை விட்டு, இவ்வுண்மையைத் தெளிவாக அறிந்து கொள்வோம். நாமறிந்ததை மற்றவர்களுக்குத் தெளிவாகக் கூறுவோம் என்கிறது

**கூறுமின் நீர்முன் பிறந்திங் கிறந்தமை**
**வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்குமின்**
**பாறணி யுமுடல் வீழவிட் டாருயிர்**
**தேறணி வோமிது செப்ப வல்லீரே** என்னும் திருமந்திரம்.

தேறணிவோம் - தெளிவு பெறுவோம்.

சிவனொடொக்குந் தெய்வத்தை எவ்விடத்திலுந் தேடிக்காண முடியாது. அவனொடொப்பாவார் யாரையும் இங்குக் காண முடியாது. மெய்யன்பர்களது இதய கமலத்திற் செஞ்சடையோ டிருந்தருளுஞ் சிவபெருமான் எல்லா அண்டங்களையுங் கடந்து, பொன்னொளியோடு விளங்குகின்றான் என்று

**சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை**
**அவனொடொப் பாரிங்கு யாவரும் இல்லை**
**புவனங் கடந்தன்று பொன்னொளி வீசும்**
**தவனச் சடைமுடித் தாமரை யானே** என்னும் மந்திரமும்,

(தவனம் - செந்நிறம், அக்கினி.)

இது பொன்னாற் செய்யப்பட்ட அழகிய சடையோவென் றையுறுமாறு, பின்புறத்திற் பொன்னொளி விளங்க வீற்றிருப்பவன் என்னிறைவன். அவனது திருநாமம் நந்தியென்பதாகும். அவன் என்னால் வணங்கப்படுகின்றான். நான் அவனை வணங்குவதுபோல, தான் வணங்குவதற்கு எவருமில்லாதவன் அவனென்று.

**பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்**
**பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி**
**என்னால் தொழப்படும் எம்மிறை மற்றவன்**
**தன்னால் தொழப்படு வாரில்லைத் தானே** என்னும் மந்திரமுங் கூறுகின்றன.



நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்ய வேண்டுமென்னும் பெருங் கருணையோடிருக்கின் றான். எண்ணற்ற தேவர்கள் தமது வினை காரணமாகப் பிறந்திறந்து போனார்களென்று கூறப்படுகின்றது. இதையறிந்தும் மண்ணவரும் விண்ணவரும் சிவனே பெருமைக்குரியவன் என்பதை அறிகிறார்க ளில்லை; அவனை வணங்கி அருள் பெறுகிறார்களில் லையே என்றெண்ணி, அவர்களுக்காக இரங்குந் திருமூலர்.

**கண்ணுத லானொரு காதலின் நிற்கவும்**
**எண்ணிலி தேவர் இறந்தா ரெனப்பலர்**
**மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்**
**அண்ண லிவனென் றறியகில் லார்களே** என்று கூறுகின்றார்.

ஒருவர் சிவ வழிபாட்டில் ஈடுபடுவதற்கு, அவர் முற்பிறவிக ளில் நல்வினை செய்திருக்க வேண்டும். அவனருள் பெற்றாலன்றி அவன்தாள் வணங்க முடியாது தீவினை செய்தோர் சிவனை வழிபடாது சிறு தெய்வங்களையே வணங்குவர். அவர்கள் இவ்வுண்மையை உணர்ந்த பின்பாவது சிவனை வழிபட முயல வேண்டுமென்பது திருமூலர் கூறும் அறிவுரை.

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்**
**சிவ சிவ என்னச் சிவகதி தானே** என்கிறது திருமந்திரம்.

# பதினொராந் திருமுறை

திருவாலவாயுடையாரும் காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவ நாயனார், கல்லாடதேவ நாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பதினொருவரும் பாடியருளிய நாற்பது நூல்கள் இத்திருமுறையில் இடம்பெறுகின்றன. இந்நூல்களில் சைவ சமயிகள் வழிபடவேண்டிய தெய்வம் எது என்பது பற்றிக் கூறப்படும் சில செய்திகளைப் பார்ப்போம்.

**ஈசன் அவனல்லா தில்லை யெனநினைந்து**
**கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து - பேசி**
**மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்**
**பிறவாமைக் காக்கும் பிரான்.** என்பது காரைக்காலம்மையார் பாடிய திருவிரட்டை மணிமாலையிலுள்ளதொரு பாடல்.

ஈசனையன்றி வேறொரு கடவுள் இல்லையென நினைந்து, அவனுடைய பெருமையையும் தமது சிறுமையையுமெண்ணி நாணங்கொண்டு, அவனைத் தம் மனத்திலிருத்தி, அவனுடைய பெருமைகளைப் பேசி, அவனை மறவாது வாழ்வாரை எம்பிரான் மண்ணுலகிற் பிறவாமற் காத்தருள் புரிவானென்பது இவ் வெண்பாவின் பொருள்.

இறைவன் நெற்றிக் கண்ணைக் காட்டியதனால் உண்டான வெப்பு நோயைப் பொறுக்கலாற்றாது பொற்றாமரைக் குளத்திற் குதித்த நக்கீரருக்கு நல்லுணர்வுண்டானபோது அவர் பாடிய நூல் கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி. அதிலுள்ளதொரு பாடல் வருமாறு:-

**இயம்பாய் மடநெஞ்சே ஏனோர்பால் என்ன**
**பயம் பார்த்துப் பற்றுவான் உற்றாய் - புயம்பாம்பால்**
**ஆர்த்தானே காளத்தி அம்மானே என்றென்றே**
**ஏத்தாதே வாளா இருந்து**

பயம் - பயன். ஆர்த்தான் - கட்டியவன். வாளா - வீணாக.

அறிவற்ற மனமே! திருப்புயங்களிற் பாம்பணிந்தவனே, காளத்தியப்பனேயென்று எம்பெருமானை ஏத்தாமல், அவனைத் தவிர்ந்த பிற சிறுதெய்வங்களிடமிருந்து என்ன பயனை எதிர்பார்த்து வீணாக அவற்றையடைய முயலுகின்றாயென்பது இவ்வெண்பாவின் பொருள். பிற தெய்வங்களை வழிபடுவது பயனற்ற செயலாகு மென்பது நக்கீரரின் கருத்து.

கோபப் பிரசாதம் என்பது நக்கீரதேவ நாயனார் அருளிச் செய்த பாடல்களில் ஒன்று. அப்பாடலில்,

**"நீற்றிடைத் திகழும் நிந்தனை முத்தனை**
**வாக்கும் மனமும் இறந்த மறையனை**
**பூக்கமழ் சடையனைப் புண்ணிய நாதனை**



**இனைய தன்மையன் என்றறி வரியவன்**
**தனைமுன் விட்டுத் தாம்மற்று நினைப்போர்**
**மாமுயல் விட்டுக்**
**காக்கை பின்போம் கலவர் போலவும்**
**விளக்கங் கிருப்ப மின்மினி கவரும்**
**அளப்பருஞ் சிறப்பில் ஆதர் போலவும்**
**கச்சங் கொண்டு கடுந்தொழில் முடியாக்**
**கொச்சைத் தேவரைத் தேவரென் றெண்ணிப்**
**பிச்சரைப் போலவோர்**
**ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று**
**வட்டனை பேசுவர் மானுடம் போன்று**
**பெட்டினை உரைப்போர் பேதையர் நிலத்துன்**
**தலைமீன் தலைஎண் பலமென் றாலதனை**
**அறுத்து நிறுப்போர் ஒருத்தர் இன்மையின்**
**மத்திர மாகுவர் மாநெறி கிடப்பவோர்**
**சித்திரம் பேசுவர் தேவ ராகில்**
**இன்னோர்க் காய்ந்தனர் இன்னோர்க் கருளினர்**
**என்றறிய உலகின்**
**முன்னே உரைப்ப தில்லை ஆகிலும்**
**ஆடு போலக் கூடிநின் றழைத்தும்**
**மாக்கள் போல வேட்கையீ டுண்டும்**
**இப்படி ஞானம் அப்படி அமைத்தும்**
**இன்ன தன்மையன் என்றிரு நிலத்து**
**முன்னே அறியா மூர்க்க மாக்களை**
**இன்னேகொண் டேகாக் கூற்றம்**
**தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே" என்று கூறப்படுகின்றது.**

மறையன் - வேதப்பொருளாயிருப்பவன். மற்று-வேறு. கலவர்-கீழ்மக்கள், அறிவிலிகள். கச்சம்-கச்சை. கொச்சைத் தேவர் - இழிவான தேவர். பிச்சர் - பித்தர். வட்டனை - பெருமை. பெட்டு - பொய். தலை எண்பலம் - ஒன்று எட்டுப்பலம்.

(பலம் என்பது அக்காலத்தில் வழக்கிலிருந்த ஒரு நிறுத்தலளவை அலகு. ஒருவருக்கு ஒன்று வீதம் கொடுத்தேன் என்பதற்குப் பதிலாக, தலைக்கொன்று கொடுத்தேன் என்று கூறுவதும் உண்டு). மத்திரம் - மகிழ்ச்சி.

மகா சங்காரமாகிய சுடலையில் விளங்கித் தோன்றுபவனும் என்றுமுள்ளவனும் அநாதி முத்தனும் மனவாக்குக் கெட்டாதவனும் வேதப் பொருளாயிருப்பவனும் பூமணங்கமழுஞ் சடாபாரத்தை யுடையவனும் புண்ணிய நாதனும் இன்ன தன்மையனென்று அறிவரியவனு மாகிய சிவனை நினைத்து வழிபடுவதை விட்டு, பிற தெய்வங்களை வழிபடுவோர். தமக்குணவாகப் பயன்படக்கூடிய பெரிய முயலைத் துரத்திப் பிடிப்பதை விட்டு, உணவுக்குப் பயன்படாததும் பறந்து செல்வதுமான காக்கையைக் கலைத்துப் பிடிக்க முடியலும் கீழ்மக்களைப் போன்றவர்கள். இருளைப் போக்குவதற்கு விளக்கிருக்க, அதைப் பயன்படுத்தாமல் மின்மினியைத் தேடியலையும் அறிவிலிகளைப் போன்றவர்கள். இத்தகையோர் கச்சை கட்டிக்கொண்டு சென்றும் எந்த வீரச் செயலையுஞ் செய்யாத இழிந்த தேவரைக் கடவுளெனக் கருதி, ஒரு ஆரியப் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு, பேய்போற் புலம்பி, தம்மை அத் தெய்வத்தின் பெருமை பேசும் மானுடம் போற் காட்டிப் பொய் பேசுவர்.

மீனைத் தலையிற் சுமந்துகொண்டு அறிவிற் குறைந்த மக்கள் வாழுமிடங்களுக்குச் செல்வர். அங்குள்ளோர், உங்கள் தலையிலுள்ள மீனின் நிறையென்னவென்று கேட்க, நிறை குறைவானாலும் - ஒவ்வொன்றும் எட்டுப் பலமென்பர். அவ்விடங்களில் அவர்கள் கூறியதை நம்பி, மீனை அறுத்து நிறுத்துப் பார்ப்போர் ஒருவரு மில்லாமையால் மகிழ்ச்சியடைவர்.

பெருநெறியாகிய சிவநெறி கிடப்ப, அதைப் பற்றிப் பேசுவதை விட்டு பொய்யை மெய்போலச் சித்திரமாகப் பேசுவர். அவர்களாற் பேசப்படுபவர் ஒரு கடவுளானால், அவர் யாரைக் கோபித்தார். யாருக்கு அருள் செய்தார் என்று இவ்வுலகிலுள்ளோர் அறியும்படி ஏன் கூறுகின்றார்களில்லை?

ஆடு கதறித் தன்னினத்தை அழைப்பது போலக் கூட்டமாகக் கூடிநின்று மற்றையோரைத் தம்முடன் வந்து சேருமா



றழைத்தும், விரும்பியதை அனுபவித்தும் தம்மறிவை அந்தச் சிறுதெய்வ நெறியிற் செலுத்தியும் முதல்வனை இன்ன தன்மைய னென்றறியாது. இவ்வுலகில் வாழும் மூர்க்க மாக்களை இப்பொழுதே கொண்டு போகாத கூற்றுவன் பெருந் தவறிழைக்கின்றான், பெருந் தவறிழைக்கின்றான் என்று கூற்றுவன் மீது கோபங்கொண்டு குற்றஞ் சுமத்துகிறார் நக்கீரர்.

**ஆளெனப் புதிதின்வந் தடைந்திலம் அத்தநின்**<br>
**தாளின் ஏவல் தலையின் இயற்றி**<br>
**வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்**<br>
**ஐந்தெழுத் தவையெம் சிந்தையிற் கிடத்தி**

**நனவே போல நாடொறும் பழகிக்**<br>
**கனவிலும் நவிற்றும் காதலேம் வினைகெடக்**<br>
**கேட்பது நின்பெருங் கீர்த்தி மீட்பது**<br>
**நின்னெறி அல்லாப் புன்னெறி படர்ந்த**<br>
**மதியில் நெஞ்சத்தை வரைத்து நிதியென**

**அருத்திசெய் திடுவ துருத்திர சாதனம்**<br>
**காலையும் மாலையும் கால்பெயர்த் திடுவதுன்**<br>
**ஆலயம் வலம்வரு தற்கே..........** என்பது பட்டினத்துப் பிள்ளையார் பாடிய கோயில் நான்மணி மாலையில் இடம்பெறும் இணைக்குறள் ஆசிரியப்பாவின் ஒரு பகுதி.

அத்தனே! நாம் புதிதாக உன்னைவந்தடைந்த உன்னடிமை களல்ல; வழிவழியாக நீ காலாலிட்ட பணியைத் தலையா லியற்றும் மரபைச் சேர்ந்தவர்கள். நாம் கூறுவது உனது ஐந்தெழுத்து மந்திரம். நாடோறும் அம் மந்திரத்தை எம் மனத்திலிருத்திப் பழகி அதை நனவிற் போலக் கனவிலுங் கூறவேண்டுமென்னுங் கருத்துடையோம். எமது வினை கெடும் பொருட்டு உன்பெரும் புகழைக் கேட்போம். நாம் மீட்டெடுப்பது உன்னெறியாகும் சிவநெறியல்லாத புன்னெறியிற், செல்லும் மதிகெட்ட எம்மனத்தை. நாம் விரும்புஞ் செல்வம் இதுதானென வரையறை செய்து கொள்வது விபூதி உருத்திராக்கங்களை, காலையிலும் மாலையிலும் எமது கால்களை எடுத்து வைப்பது உன் ஆலயத்தை வலம் வருவதற்கே யாகுமென்பது இப்பகுதியிற் பட்டினத்துப் பிள்ளையார் கூறியதன் பொருள்.

இவ்வாறு கூறிய பட்டினத்துப் பிள்ளையார், திருவிடை மருதூர் மும்மணிக் கோவையிலுள்ளதொரு ஆசிரியப் பாவில், ஏகநாயனனே...........................

20. **யானினிப் பிறத்தல் ஆற்றேன் அ.்.தான்**
**றுற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது**
**பிறிதொரு நெறியின் இல்லையந் நெறிக்கு**
**வேண்டலும் வெறுத்தலும் ஆண்டொன்றிற் படரா**
**உள்ளமொன் றுடைமை வேண்டும்.....** என்று கூறுகின்றார்.

ஏக நாயகனே! யான் இனியும் பிறவித் துன்பத்தைப் பொறுக்க மாட்டேன். நான் பிறவாதிருக்க வேண்டும். அதற்கு வழி உன்னை உறுதியாகப் பற்றி நிற்பதல்லது வேறொரு சமய நெறியில் இல்லை. பிறப்பை இல்லாமற் செய்ய முடியாத அந்நெறிகளை விரும்புவதும் வெறுத்தலும் அத்தகையதொரு நெறியிற் செல்ல விரும்பாத உள்ளமுந் தனக்கு வேண்டுமென்பது பிள்ளையாரின் வேண்டுகோள்.

கோயிற் திருப்பண்ணியர் விருத்தமென்பது, தேவாரத் திருப்பதிகங்கள் இருக்குமிடத்தை யறியும் பொருட்டு நம்பியாண்டார் நம்பிகளால் திருத்தில்லையிற் பாடப்பட்டது. இதிலுள்ளதொரு பாடல்.

**புல்லறி வின்மற்றைத் தேவரும் பூம்புலி யூருள் நின்ற**
**அல்லெறி மாமதிக் கண்ணிய னைப்போ லருளுவரே**
**கல்லெறிந் தானுந்தன் வாய்நீர் கதிர்முடி மேலுகுத்த**
**நல்லறி வாளனும் மீளாவழிச்சென்று நண்ணினரே** என்பது.

சிற்றறிவினையுடைய மற்றைத் தெய்வங்களும் பூம்புலியூரில் எழுந்தருளியிருப்பவனும் இருளகற்றும் பெருமை பொருந்திய பிறைச் சந்திரனைத் தலைமாலையாகச் சூடியவனுமாகிய எம்பெருமான் அருள் புரிவதுபோல் அருள்புரிவரோ? இல்லை. சிவனுக்குக் கல்லெறிந்து வழிபட்ட சாக்கிய நாயனாரும், தன் வாய் நீரை ஒளிபொருந்திய திருமுடிமேற் சொரிந்த சிவஞானியாகிய கண்ணப்பனும் மீண்டும் பிறவா நெறியருளும் சிவநெறியிற் சென்று வீடுபேறடைந்தனர் என்று கூறுகின்றது இப்பாடல். என்ன வேடம் பூண்டு எவ்வாறு வழிபட்டாலும் சிவனை அன்போடு வழிபடுவோர் கதியடைவர் என்பது நம்பியின் கருத்து.



# பன்னிரண்டாந் திருமுறை

பன்னிரண்டாந் திருமுறை எனப்படும் திருத்தொண்டர் புராணம் சிவனருளால் உருவானது. சிவபெருமான் திருத்தொண்டத் தொகை பாடுவிப்பதற்காகச் சுந்தரரைத் திருக்கைலாயத்திலிருந்து இவ்வுலகுக்கு அனுப்பினார். திருவாரூர்த் திருக்கோயிலுக்குச் சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் தேவாசிரியன் மண்டபத்தில் அடியார்கள் அமர்ந்திருப்பதைக் கண்டு, இவர்க்கு என்னை அடியனாக்கும் நாள் எந்நாளோ வென்றெண்ணிப் பரமர் தாள் பரவிச் சென்றார். அவருக்கு அருள் புரியக் கருதிய சிவபெருமான் சுந்தரருக்கு அடியார்களது வழித் தொண்டையும் அவர்களது பெருமையையு முணர்த்தி யருளினார். அப்போது சுந்தரர்

**"இன்னவா றின்ன பண்பென் றேத்துகே னிதற்கு யானார்**
**பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செய் யென்ன"**

எம்பெருமான் தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கு மடியேன் என்று அடியெடுத்துக் கொடுத்து, எல்லையில் வண்புகழாரை இசைப்பா மொழியென்றார். சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடினார்.

பதினொரு திருமுறைகளையும் வகுத்தமைத்த நம்பியாண்டார் நம்பி, சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையைத் திருவருளின் துணைகொண்டு நோக்கி, நாயன்மார்களுடைய வரலாறு. அவர்கள் செய்த தொழில் முதலியவற்றைத் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளை யாருடைய திருவருளாலறிந்து திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார்.

**............. இபமுகத்தோ னருள்செய்த பகுதியினால்**

**வாக்கியல்சே ரந்தாதி நம்பி யடைவே வகுத்தார்**
என்கின்றது திருமுறை கண்டபுராணம் (29). இபம்-யானை.

திருத்தொண்டர் புராணம் பாடும் பொருட்டு, அபயகுல சேகரன் கொடுத்த நிதியுடன் சிதம்பரத்துக்குச் சென்ற சேக்கிழார், தில்லைக் கூத்தனுடைய திருவடிகளைப் பணிந்து நின்று,

**அடிகளே, உனது அடியார்சீர் அடியேன் உரைத்திட அடியெடுத்துத் தருவாயெனத் திருவருளை எண்ணி இறைஞ்சினார்.** அப்போது

**“அலைபுனற்பகி ரதிநதிச்சடை யாடவாடர வாடநின்**
**றிலகுமன்றினி லாடுவார்திரு வருளினாலச ரீரிவாக்**
**குல கெலாமென வடியெடுத்துரை செய்பேரொலி யோசைமிக்**
**கிலகுசீரடி யார்செவிப்புலத் தெங்குமாகி நிறைந்ததால்**
என்கிறது சேக்கிழார் நாயனார் புராணம்.

பகிரதி - கங்கை, அரவு - பாம்பு, மன்று - சிற்றம்பலம்.

சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையிலுள்ள ஒழுங்கின்படி நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந் தாதியைக் கடைப்பிடித்துச் சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடி முடித்தார். இச் செய்தியை அறிந்த அபயகுல சேகரன் சேக்கிழாரையுந் தில்லையம்பல வாணனையும் வணங்க வெண்ணித் தில்லைக்குச் சென்று, பொன்னம்பலத்திற் றில்லைக் கூத்தன் வெளிப்பட் டருளக் கண்டு வணங்க,

**சேக்கிழானமது தொண்டர்சீரவ நாமகிழ்ந்துலக மென்றுநம்**
**வாக்கினாலடி யெடுத்துரைத்திட வரைந்து நூல்செய்து முடித்தனன்**
**காக்கும் வேல்வளவ நீயிதைக்கடிது கேளெனக்கனக வெளியிலே**
**ஊக்கமானதிரு வாக்கெழுந்தது திருச்சிலம்பொலியு முடனெழ** என்று கூறுகின்றது சேக்கிழார் நாயனார் புராணம் (64).

இவ்வாறு, திருத்தொண்டத் தொகை பாடும் பொருட்டுச் சுந்தரரைப் பூமியிற் பிறக்கச் செய்தது முதல், திருத்தொண்டர் புராணம் பாடி முடிந்ததென அறிவிக்கப்பட்டது வரையான எல்லா நிகழ்வுகளுஞ் சிவனருளால் நிகழ்ந்தவையாகும். திருத்தொண்டர் புராணம் பெரியபுராணமெனவும் அழைக்கப்படும். இப் புராணத்தைப் பாடத்தொடங்கிய சேக்கிழார்,

**“எடுக்கு மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்**
**நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்**
**தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்**
**கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்”** என்று மூத்த பிள்ளையாருக்கு வணக்கங் கூறியிருக்கிறார்.

கடம் - மதம். மாக்கதை - பெரியபுராணம்.



இம்மாக்கதையிற் கூறப்படும் அடியார்கள் எல்லோருஞ் சிவனை வழிபட்டு வீடுபேறடைந்தவர்கள். கற்புடைய பெண்ணொருத்தியைப் பற்றிக் கூறும்போது அவள் பிற ஆடவரை விரும்பாதவளென்று கூறவேண்டிய தேவை ஏற்படாது. அதுபோலவே சிவனடியார்களைப் பற்றிக் கூறும்போது, அவர்கள் பிறதெய்வ நெறியில் நிற்காதவர்கள் என்று கூறவேண்டிய தேவை ஏற்படாது. ஆனாலும், தம்மைச் சைவ சமயிகள் என்று கூறிக்கொண்டு சிவ நெறியில் நிற்காது சிறுதெய்வ நெறியில் நிற்போரையும் நன்னெறிப்படுத்த வேண்டுமென்னுங் கருத்தினாற் போலும் சில சந்தர்ப்பங்களிற் சிறுதெய்வ வழிபாடு அடாதென்பதை உணர்த்துவதற்குஞ் சேக்கிழார் தவறவில்லை.

அமர் நீதி நாயனார் **“சிந்தை செய்வது சிவன்கழ லல்லதொன் றில்லார்”** (அ.நா.பு.3) என்று கூறிய சேக்கிழார், ஆனாய நாயனாரைப் பற்றிப் பாடும்போது, அவர்

**‘ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்**
**தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும் புள்ளார்**
**வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலிற்**
**பேயுட னாடு பிரானடி யல்லது பேணாதார்’’** என்கிறார்.

தொழும்பு - தொண்டு. வினைப்பால் - செயலால்.

திருநாளைப் போவார் நாயனார்,

**“பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்தகைபாற்**
**சிறந்தபெருங் காதலினாற் செம்மைபுரி சிந்தையராய்**
**மறந்துமய னினைவின்றி வருபிறப்பின் வழிவந்த**
**அறம்புரிகொள் கையராயே யடித்தொண்டி னெறிநின்றார்**
என்று கூறுகின்றார் சேக்கிழார்.

கண்ணி - தலைமாலை.

பிறவிக் குருடரான தண்டியடிகள் நாயனார் திருவாரூரில் தீர்த்தக் குளம் வெட்டினார். அவர் குளம் வெட்டுவதைத் தடுக்க முயன்ற சமணர், நாயனாரைப் பார்த்து **மண்ணைக் கல்லிற் பிராணிபடும் வருத்த வேண்டா** வென்றுரைத்தார்.

கல்லுதல் - தோண்டுதல். படும் - இறக்கும்.

நாயனார் **“பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக் கானபணி ஆசிலா நல்லறமாவ தறியவருமோ உமக்கு”** என்றார்.

ஆசு - குற்றம். சமணர்கள் **“சிந்தித் திந்த அறங்கேளாய்**

**செவியு மிழந் தாயோ?" என்றனர்.**

அப்போது தண்டியடிகள்,

**"வில்லா லெயின்மூன் றெரித்தபிரான்**
**விரையார் கமலச் சேவடிகள்**
**அல்லால் வேறு காணேன்யா**
**னதுநீ றறிதற் காரென்பார்**
**நில்லா நிலையீ ருணர்வின்றி**
**நுங்கண் குருடா யென்கணுல**
**கெல்லாங் காண யான்கண்டா**
**லென்செய் வீரென் றெடுத்துரைத்தார்"** என்கின்றார். சேக்கிழார்.

எமது மனம் ஒன்றைவிட்டொன்றைப் பற்றுந் தன்மையுடையது. **"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்"** என்கின்றார் ஔவையார். மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருப்பவர் களால் இறைவனை உறுதியாகப் பற்றி நிற்க முடியாது. அதனாற் சிவனடியார், சிறு தெய்வங்கள் மீது வைக்கும் பற்றுட்பட எல்லாப் பற்றுக்களையும் விட்டு எப்போதும் சிவனையே பற்றி நிற்பர். இந்நிலையில் நின்றவர்களில் ஒருவர் சாக்கிய நாயனார்.

அவர்,

**"எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலும்**
**மன்னிய சீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருளென்றே**
**துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்**
**தன்னைமிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார்"**

என்கின்றது திருத்தொண்டர் புராணம்.

துன்னிய வேடம் - பூண்ட வேடம், கொண்ட வேடம். மெய் நிலையானது. பொய் நிலையில்லாதது. மெய்ப்பொருள் - சிவன். பொய்ப்பொருள் நிலையற்ற உலகப் பொருள். நாம் வேண்டினால் எமக்கு வேண்டிய எல்லாவற்றையுந் தரவல்லவன் மெய்ப்பொருளாகிய சிவன். பொய்மையாளரால் எமக்கு நாம் வேண்டுவன எல்லாவற்றையுந் தரமுடியாது.



**"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்**
**சார்வி னுந்தொண்டர் தருகிலாப்**
**பொய்மை யாளரைப் பாடா தேயெந்தை**
**புகலூர் பாடுமின் புலவீர்காள்"** என்று புலவர்களுக்கு அறிவுரை கூறுகின்றார் சுந்தரர்.

பொய்மையாளரைப் பாடும் புலவர்கள் யாரையும் எதையும் எதற்காகவும் பாடுவார்கள். பொய்யடிமையில்லாத புலவர்கள் மெய்ப்பொருளாகிய சிவனையன்றி வேறெவரையும் எக்காரணங் கொண்டும் பாடமாட்டார்கள். இந்தப் பொய்யடிமை இல்லாத புலவர்களுக்கும் ஒரு புராணம் பாடியிருக்கிறார் சேக்கிழார். அதில்,

**பொற்பமைந்த வரவாரும் புரிசடையார் தமையல்லால்**
**சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறி தலைநின்ற**
**பெற்றியினின் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்**
**மற்றவர்தம் பெருமையா றறிந்துரைக்க "வல்லார்கள்"** என்று கேட்கிறார் அவர்.

பொற்பு - அழகு. அரவாடும் - பாம்பணிந்த. பெற்றி - தன்மை.

கழற்சிங்க நாயனார் புராணத்தைப் பாடத்தொடங்கிய சேக்கிழார்

**"படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்**
**கடிமதின் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய**
**அடிமல ரன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்**
**கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்க ரென்பார்"**

என்று பாடியதன் மூலம் கங்கைவார் சடையார் செய்ய அடி மலரன்றி வேறொன்று அறிவினிற் குறியாமையே கழற்சிங்கரின் சிறப்பென்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

இடங்கழி நாயனார் புராணம்,

**"இடங்கழியா ரெனவுலகி லேறுபெரு நாமத்தார்**
**அடங்கலர்முப் புரமெரித்தா ரடித்தொண்டி னெறியன்றி**
**முடங்குநெறி கனவினிலு முன்னாதா ரெந்நாளும்**
**தொடர்ந்தபெருங் காதலினாற் றொண்டர்வேண் டியசெய்வார்"**

என்று இடங்கழியாரைச் சிறப்பித்துக் கூறுகின்றது. முடங்கு நெறி - கீழான நெறி. உன்னாதார் - நினைக்காதார்.

முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் புராணத்தில்,

**"நாரணற்கும் நான்முகற்கு மறிய வொண்ணா**
**நாதனையெம் பெருமானை ஞான மான**
**ஆரணத்தி னுட்பொருள்க ளனைத்து மாகும்**
**அண்ணலையெண் ணியகால மூன்று மன்பின்**
**காரணத்தா லர்ச்சிக்கு மறையோர் தங்கள்**
**கமலமலர்க் கழல்வணங்கிக் கசிந்து சிந்தைப்**
**பூரணத்தான் முழுநீறு பூசி வாழும்**
**புனிதர்செய லறிந்தவா புகல லுற்றேன்"** என்று கூறுகின்றார் சேக்கிழார்.

ஆரணம் - வேதம். சிந்தைப் பூரணம் - மன நிறைவு.

இவ்வாறாக, சைவசமயிகள் சிவனையே வழிபட வேண்டுமென்பதையும், அவனை வேறு காரணங்களுக்காகவன்றி அன்பு காரணமாகவே வழிபடவேண்டுமென்பதையும் வலியுறுத்துகின்றார் சேக்கிழார்.

இப்புராணத்தில் சேக்கிழார் பாடிய பாடல்களிலொன்று
**"பூத மைந்து நிலையிற் கலங்கினும்**
**மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காத லுறைப்பி னெறிநின்றார்**
**கோதி லாத குணப்பெருங் குன்றனார்"** என்று கூறுகின்றது.

இத்தகைய சிறப்புடையவர்களும் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு பாதங்களையுமநுட்டித்து முத்தி பெற்றவர்களுமாகிய தனியடியார் அறுபத்து மூவரதும் தொகையடியார் ஒன்பதின்மரதும் வரலாற்றைக் கூறும் பெரிய புராணத்தை, இலக்கிய இலக்கணங்களைக் கற்றுணர்ந்தவர்களாலன்றி மற்றவர்களால் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாது. அதனால், குறைந்த கல்வியுடையவர்களும் திருத்தொண்டர் வரலாற்றைக் கற்றுணர வேண்டுமென்னுங் கருத்தினால் நல்லை நகர் ஆறுமுக நாவலர், பெரிய புராணத்தை எளிய வசன நடையில் எழுதினார். அவர் அந்நூலுக்கெழுதிய முகவுரையிற் கூறிய சில கருத்துக்களையாவது நாமெல்லோரும் அறிந்திருப்பது நல்லது. அவற்றுட் சில :-

"சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண்ணல், பிறன்மனை விழைதல் வரைவின் மகளிர்



விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய், குருலக்கணங்குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவதீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய், ருத்திராக்ஷதாரணம், விபூதி சந்தியாவந்தனம், ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்க பூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுரபூசை முதலியவற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்.

அந்தச் சைவர்கள் ஓதி உணர்தற்கு அத்தியாவசியகமாய் இருக்கும் நூல்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரிய புராணம் என்பவைகளாம். இவைகள் சிவபிரானது திருவருளினாலே பாடப்பட்டமையால் அருட்பாவென்று சொல்லப்படும். இவைகளுள், முன்னைய நான்கும் பதி பசு பாசமென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை உணர்த்துஞ் சைவ சித்தாந்த சாத்திரத்தின் அநுபவப் பயனாகிய தோத்திரரூபமாய் இருக்கும். பின்னையதாகிய திருத்தொண்டர் பெரிய புராணம் சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அனுட்டித்து முத்திபெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத் திறத்தை விளக்குவதாகிய சரித்திர ரூபமாய் இருக்கும்.....

இப்புராணம் சிவபுராணமாதலால் இதனை ஓதிப்பயன் பெறக் கருதுவோர்கள் சைவாசாரியரை அடைந்து தீக்ஷை பெற்றுக் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். சமயப் பிரவேசஞ் செய்யாதவர்களும் தாங்கள் சைவசமயிகள் என்றே திரிகின்றார்கள். ஒரு பொருளை நன்றெனக் கருதுகின்றவர்களுக்கு அதனைத் தேடிப்பெற்று அனுபவித்தாலன்றி அதனையுடையவர்களெனப்படுதலும் அதனாற் பெறப்படும் பயனும் இல்லையாம், அதுபோலவே சைவசமயத்தை மெய்யெனக் கருதுகின்றவர்களுக்கு சைவாசாரியாரை அடைந்து சமயப்பிரவேசஞ் செய்து அதன்வழி நின்றாலன்றி, அதனையுடையவர்களெனப்படுதலும் அதனாற் பெறப்படும் பயனும் இல்லையாம்......

சிவபெருமானது மகிமையைப் பேசும் நூல்களுள் யாதொன்றை ஓத விரும்புகின்றவர்கள் சரீரசுத்தி செய்து

அநுட்டானம் பண்ணிய பின்னரே சுத்த ஸ்தானத்திலே பீடம் இட்டு, அது எழுதப்பட்ட திருமுறையை அதன்மேல் வைத்து அதனையும் அதனைப் போதிக்கும் ஆசாரியரையும் அருச்சித்து வணங்கி இருந்து, மனங்கசிந்து உருக மெய்யன்போடு ஓதல் வேண்டும். ஓதும்போது கேட்க விரும்புகின்றவர்களும் அவ்வாறே கேட்டல் வேண்டும். அப்படியே ஓதாதவர்களும் கேளாதவர்களும் அதனாலே பெறப்படும் பயனைப் பெறார்கள் என்று சிவாகமங் களும் சிவபுராணங்களும் செப்பும்.....

சிவபெருமானுடைய மகிமையைப் பேசும் நூல்களை விதிப்படி ஓதாதவர்களும் அதனால் வரும் பயனைப் பெறார்கள் என்று நாவலர் கூறுவதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

வாகனமோட்டிப் பழக விரும்புவோனொருவன், அதை ஓட்டுவதற்குரிய விதிப்படி மிகுந்த கவனத்தோடு பயிற்சி பெற்றாலன்றி வாகனமோட்டக் கற்றுக்கொள்வதும், அதனால் வரும் பயனைப் பெறுதலும் இல்லையாம். அதுபோலவே ஞானநூல்களை விதிப்படி ஓதாதவர்களும், கேளாதவர்களும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதலாகிய பயனைப் பெற மாட்டார்கள்.

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** என்று கூறுகின்றார் வள்ளுவர். ஒருவருடைய புகழையே கேட்க விரும்பாதவர்கள் அவர் மீது அன்புடையராதல் எப்படி?

இப்போது எமது நாட்டிலுள்ள சில சைவ ஆலயங்களில் மாத்திரமே திருமுறை முற்றோதல் நிகழ்கின்ற போதிலும் இந் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றி அவற்றைப் படிப்போர் சிலராகவும் கேட்போர் அரிதாகவுமே காணப்படுகின்றர். இவர்களில் எத்தனை பேர் அவற்றைப் பொருளறிந்து ஓதுகின்றார்கள், கேட்போரில் எத்தனை பேர் அவற்றின் பொருளை அறிகின்றார்கள், எத்தனை பேர் திருமுறைகளைத் தாமாகவே பொருளறிந்தோத முயல்கின் றார்களென்னும் வினாக்கள் விடைகாண முடியாதனவாகவே காணப்படுகின்றன. இந்நிலையில், திருமுறைகளின் பொருளறிந்த வர்களில் எத்தனை பேர் அறிந்த படி ஒழுகுகின்றார்கள் என்னும் வினாவுக்கு விடைகாண்பதெப்படி? இதுவே இன்று எமது சமுதாயத்திற் சைவ சமயிகள் சிலராகவும் தம்மைத்தாமே



சைவர்களென் றழைப்போர் பலராகவும் மதம் மாறுவோ ருளராகவும் இருப்பதற்குக் காரணம்.

இவர்களில் மதம் மாறுவோரை எவருமே தடுத்து நிறுத்த முடியாது. ஒவ்வொருவருக்கும் அவரவர் விரும்பிய மதத்தை அநுட்டிக்கும் உரிமை உண்டு. இந்நிலையில், தம்மை சைவ சமயிகளெனக் கூறிக்கொண்டு அந்நெறியில் ஒழுகாதவர்களை, சைவத்திருமுறைகளுஞ் சாத்திரங்களும் போற்றுந் தெய்வத்தை வழிபடுவதை விட்டு, வேறு தெய்வங்களை வழிபடுவோரைப் பற்றியே நாம் விரிவாக ஆராய வேண்டும். இவர்கள் இவ்வா றொழுகுவதற்குக் காரணமென்ன?

இவ்வினாவுக்கு நாவலரின் மாணாக்கர் பரம்பரையில் வந்தவரும் சைவப் பேரறிஞருமான கலாநிதி. பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை அவர்கள் விளக்கந் தந்திருக்கின்றார். அது வருமாறு:-

....ஒருவன் சமயத்தை அணுகுதல் அரிது, அரிதில் ஓரோர் முறை அணுகிய வழியும் அதில் நிலைத்தல் அரிதினும் அரிது. இது

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்":- (சித்.8ம்சூ 11)
என்ற சித்தியார் வாக்கால் உணரத் தக்கது.

புறச்சமயங்களுக்குக் "கத்திடும் ஆன்மாக்க ளுரைக்கட்டு" என்று ஒரு பெயர் அருணந்தி சிவாச்சாரியர் வழங்கியிருக்கின்றார். ஆட்டுகிறவன் கருத்தறியாது ஆடினவர்கள் ஆடிய ஆட்டங்களே புறச்சமயங்கள். அவை எண்ணிறந்தவைகள், நூதனமான பேதம் உள்ளவைகள். தொடக்க முடிபு தெரியாதவைகள். தொடக்க முடிபுகளை விசாரிக்கத் தொடங்கினால், மௌனம் சாதிப்பவைகள். மௌனத்துக்கு ஆரும் என்ன கருத்துஞ் சொல்லலாம். அப்படிச் சொல்லிச் சொல்லிப் புறச்சமயங்கள் அநந்தங் கிளைகள் விட்டுப் பெருக்கெடுக்கின்றன.

ஒருவன் சிவாகமங்களைத் தூக்கித் தலையில் வைத்திருப் பான். அவைகள் சொல்லுவதென்ன? என்று விசாரியான். தன் அறியாமைகளையே விரித்து, அவைகளே ஆகமங்களின் கருத்து என்பான். தர்மம் என்றால் என்ன என்று தன் வாழ்க்கையில் ஒரு நிமிஷமாவது கடைப்பிடியாதவன், ஆகம ஏடுகளைத்

தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, ஏதும் சொன்னால், அந்தப் பொதி எருதின் வார்த்தை ஆகமக் கருத்தாகுமா? சிவாகமங்களின் பேரால், சிவாகமங்களைத் திரித்துச் சொல்லுவோன், புறச்சமயிகளுக்குள்ளே மகா மோசமான புறச்சமயி.

ஒருவன் வேத அந்தங்களாகிய உபநிஷத்துக்களின் பெயர்களை யெல்லாம் ஒப்பிக்கலாம், பல உபநிஷத் வாக்கியங்களை யெல்லாம் ஓதலாம், அவற்றின் கருத்துக்களை நடுநின்று விசாரியா திருப்பானேயானால், கர்ம விசேஷத்தினாலே தனக்குத் தோன்றும் மௌட்டிகங்களையே உபநிஷக் கருத்துக்கள் என்று வாய்புலம்பிக் கொண்டிருப்பானேயானால், அவனை எப்படி வேதாந்தி என்று சொல்லுவது? அவன் மகா மோசமான அவைதிகன். அவனும் பொல்லாத புறச்சமயியே.

வேதமும் இல்லை, ஆகமமும் இல்லை. ஆரோ ஒரு மனிதன் தன் புத்தியிற் பட்டுச் சொன்னதைச் சமயம் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் இருக்கலாம். அவனை, வேதாகமங்களைக் கருத்தறியாது உபயோகிப்பவர்கள். புறச் சமயி என்று நிந்திக்கலாம், அவன் புறச்சமயிதான். ஆனால் அந்தக் கருத்தறியாத வேதாகமக் காரர்களிலும், அவன் அவ்வளவு மோசமானவன் அல்லன். அவனை ஒரு நாளைக்கு வழிக்குக் கொண்டு வரலாம். கருத்து மோசஞ் செய்கின்ற வேதாந்தியை, அதே வேலை செய்கின்ற ஆகமியை இந்தக் கற்பத்திலே வழிக்குக் கொண்டு வரமுடியாது.

அவர்களே புறச்சமயிகளுக்குள்ளே மிகமிக அஞ்சுதற் குரியவர்கள். அவர்களோடு ஒப்பிட்டு நோக்கும் போது, வேதாகமங் களுக்குப் புறமானவர்கள் நல்லவர்கள். வேதாகமங்களை அவைகளை ஓதும் முறைகள் ஆசாரங்களை விலக்கிக் கருத்து மோசஞ் செய்கிறவர்கள் உய்தியில் குற்றஞ் செய்கிற மகா துரோகிகள். அந்தத் துரோகிகளுக்கும் சமயத்துக்கும் வெகுதூரம். உமாபதி சிவாசாரிய சுவாமிகள் வேதாகமங்களுக்குப் புறம்பானவர் களுக்கு அஞ்சவில்லை. இந்த உட் பகைவர்களுக்கே பெரிதும் அஞ்சுகின்றார். அந்த அச்சந்தான் சுவாமிகள் அருளிய சங்கற்ப நிராகரணம் என்கின்ற ஒப்புயர்வில்லாத நூல். இதுபற்றிப் பின்னொரு சந்தர்ப்பத்தில் நோக்குவோம். புறச்சமயங்கள் ஆட்டுவோன் கருத்தறியாதவைகள். கருத்தறியாது ஆடினவர்களின் ஆட்டங்கள் அவைகள்.



ஒரு யானை ஒரு குளக்கரையில் நிற்கின்றது. அதன் நிழல் குளத்துக்குள்ளே தோன்றுகின்றது. நிழலை மாத்திரங் கண்ட ஒரு சிலர் அதனை அகப்படுத்தப் பெருமுயற்சி செய்கின்றார்கள். நீந்தும் நிலையுமாய்க் குளத்துள் அலைகின்றார்கள். அவர்கள் அப்படியிருக்கக் குளக்கரையிலே ஒரு சில குருடர்கள் யானையின் ஒவ்வோர் உறுப்பைத் தொட்டுப் பார்த்து, யானையை உரல் என்றும் உலக்கை என்றும் முறம் என்றும் கலகம் இடுகின்றனர். இவர்கள் நிலையும் இப்படியாக மற்றொரு பகுதியார் யானையின் ஒவ்வோர் உறுப்பைத் தீண்டிப் பார்த்து, அவ்வளவில் திருப்தி பிறவாமல் முழுப்பொருளைக் காண முயன்றுகொண்டிருக்கின்றார்கள்.

யதார்த்தமான ஒருபொருள்தானே மூன்று பகுதியாரை சிருஷ்டித்திருக்கின்றது. ஒருபகுதியார் குளத்துக்குள் ஆழ்ந்து யானை பிடிக்கின்றார்கள். மற்றொரு பகுதியார் உரல், உலக்கைகளை யானை என்கிறார்கள். இன்னொரு பகுதியார் தாம் கண்டவை முழுப் பொருளின் ஏகதேசமே என்று கொண்டு முழுப்பொருளைக் காண முயல்கிறார்கள். இந்த மூன்றாவது பகுதியார் ஒருநாளைக்கு உண்மையைக் கண்டேதீருவார்கள். அவர்களைச் சமயிகள் என்று சொல்லலாம். அவர்கள் ஒருநாளைக்கு ஒரு புள்ளியில் ஒன்று கூடுவார்கள். ஒரு வட்டத்தில் நடுப்புள்ளியைத் தீண்டும் விட்டார்த்தம் போன்றவர்கள் அவர்கள்.

குளத்துள் ஆனை தேடுகிறவர்கள் யானையைப் பற்றிய நூல்களுக்குப் புறம்பானவர்கள்.

உரல், உலக்கை பேசுகிற குருடர்கள் கையில் அகப்பட்டதைப் பயன்படுத்த அறியாதவர்கள். இவர்களே வேதாகமங்களைச் சுமந்துகொண்டு அவற்றுக்கு விரோதம் பேசுபவர்கள். இவர்களுக்கும் குளத்துக்குள் ஆனை தேடுபவர்களுக்கும் வேறுபாடு, இவர்கள் வேதாகமங்களோடு உரிமை கொண்டாடுகின்றார்கள். அவர்கள் வேதாகமங்களைக் கொள்வதில்லை, அவ்வளவே. இரு பகுதியாரும் உண்மையைக் கண்டதுமில்லை, காணப்போவதும் இல்லை.

வேதாகமங்களைக் கொள்ளாதவர்களைப் புறப்புறமென்றும், வேதங்களை மாத்திரம் பிறழ்ந்து கொள்ளுகிறவர்களைப் புறமென்றும், வேதாகமங்களைப் பிறழ்ந்து கொள்ளுகிறவர்களை அகப்புறமென்றும் வகுப்பதுண்டு. இந்தமுத்திறமும் உண்மையைக் காணாதவகையில், உண்மைக்குப் புறமே.

ஒரு உண்மை எண்ணிறந்த பிறழ்வுகளை உற்பத்தி செய்வதில் நூதனம் இல்லை. பிறழ்வுகள் உண்மையின் குற்றம் அல்ல. உண்மையை நோக்குபவர்களின் தகுதிக் குறைவால் வருங் குற்றம்.

காணப்படுகின்ற இந்த உலகத்தையே பொய்யென்றும், மெய்யென்றும், இரண்டுந்தானென்றும் அல்ல என்றும் சமயவாதிகள் சண்டை போடுகின்றார்கள். காணப்படுகின்ற உலகத்தின் பாடே இங்ஙனமானால் காணப்படாத உண்மைகளின் பாடு எப்படி யிருக்கும்?...

(சமயக் கட்டுரைகள். சமயம்5)

ஏகதேசம்- ஒருபகுதி

குளக்கரையில் நின்ற ஒரு யானைதானே, குளத்தில் இறங்கி யானை பிடிப்பவர்கள், யானையின் ஒவ்வோர் உறுப்பைத் தொட்டுப் பார்த்து உறுப்புக்களையே யானையென்று கூறுகின்றவர்கள், தாம் கண்டது முழுப்பொருளின் ஒருபகுதியே எண்ணுணர்ந்து முழுப்பொருளைக் காண முயலுபவர்கள் என மூன்று பகுதியினரை உருவாக்கி யிருக்கிறதென்று பண்டிதமணி கூறுவது மறுக்க முடியாத உன்மையேயானாலும் இன்றைய சூழ்நிலையில் அந்த யானை நான்காவதாக இன்னொரு பிரிவினரையும் உருவாக்கி இருக்கிறது போலத் தோன்றுகிறது. அவர்கள் யானை நிற்குந் திசையை நோக்கிச் செல்லாமல், வேறொரு திசையிற் சென்று அங்கே தாம் காணுகின்ற விலங்குகளையெல்லாம் யானை எனக் கருதுகின்றவர்கள். அவர்கள் சைவத் திருமுறைகளும் சாத்திரங்களும் என்ன கூறுகின்றன என்பதை நோக்காமல், அவற்றைத் தவிர்ந்த வேறு நூல்களைப் படித்து அந்நூல்களாற் போற்றப்படும் மனிதர்களையும் கதாபாத்திரங்களையும் கடவுளரெனக் கருதுபவர்கள்.

சிவநிந்தனையோடு கூடிய தக்க யாக சங்காரம் முடிந்தது. இறந்தவர்கள் எல்லோரும் திருவருளால் உயிர்பெற்றெழுந்தனர். தக்கன் எழுந்திராததைக் கண்ட பிரமதேவர் அவனையும் எழுப்பி



யருளும்படி வீரபத்திரக் கடவுளை வேண்டினார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்கிய வீரபத்திரக் கடவுள் அனைவரையும் உயிர் பெற்றெழச் செய்தார். தக்கன் ஆட்டுத் தலையோடு எழுந்து நின்றான். அவனுடைய நிலையைக் கண்டிரங்கிய பிரமதேவர் தக்கனைப் பார்த்து

**"எம்மையும் பரமென்றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்**
**வெம்மைகொ ணெஞ்சர் தீரா விழுமவெந் நிரயம் வீழ்வர்"**

ஆதலால் நீ தேவாதி தேவனாகிய சிவனை நோக்கித் தவஞ் செய்து உய்தி கூடுவாயாக வென்றார். தக்கன் ஆயிரமாண்டு தவம் செய்து சிவகதியடைந்தான்.

(நம்மையும் -பிரம விட்டுணுக்களாகிய எம்மையும், நாதனிற் சிறப்பு செய்தல்- சிவனுக்குச் செய்வது போன்ற சிறப்புச் செய்தல்)

பிரமவிட்டுணுக்களுக்குச் சிவனுக்குச் செய்வது போன்ற சிறப்புச் செய்வோரே நரகத்தில் வீழ்வரென்றால், பிறந்திறந் துழலும் மனிதர்களையும், கதாபாத்திரங்களையும் கடவுளரெனக் கருதி அவர்களை வழிபடுவோரின் நிலை என்னாகும்? சிவனுக்குப் பூசை செய்வது போல அவர்களுக்குப் பூசை செய்வோரின் நிலை என்னாகும்?

இறுதியாக, சைவ சமயிகள் வழிபடவேண்டிய தெய்வம் எது என்பது பற்றி மறைமலையடிகள் என்ன கூறுகின்றார் என்பதைப் பார்ப்போம்.


"முழுமுதற் கடவுளாகிய நம் சிவபெருமானையன்றி, வேறு நம்போன்ற சிற்றுயிர்களின் வடிவங்களைக் கல்லிலுஞ் செம்பிலுஞ் செய்து வைத்துக் கொண்டு அவற்றை வணங்குதலே பெரிதுங் குற்றமாவதாம். மாரி, கூளி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன் முதலிய ஆவிகளெல்லாம் நம்போற் குற்றமுடைய சிற்றுயிர்களா தலின் அவற்றைத் துணையாகக் கொள்வது ஒரு குருடன் மற்றொரு குருடனைத் துணை கூட்டிச் சென்று இருவரும் பள்ளத்தில் வீழ்வதற்கே ஒப்பாம். விவிலிய நூலிலுங் கடவுளுக்கு மாறான உருவங்களை வணங்குதல் ஆகாதென்று சொல்லப்பட்டதே யல்லாமற் கடவுளின் திருவுருவத்தை வழிபடுதல் வழுவென்று கூறப்பட்டதில்லை.

ஈசாவசியோபநிடதத்தின் ஒன்பதாவது மந்திரமும் **அறியாமையொடு கூடிய சிற்றுயிரின் வடிவங்களை வணங்குபவர்கள் இருள் நிறைந்த நிரயத்திற்குச் செல்கின்றார் கள்.** என்று இங்ஙனமே கூறுகின்றது. ஆகையால் முழுமுதற் பழம் பொருளின் உண்மை அருள் வடிவாய் அம்மையப்பராய் நின்ற திருவுருவத்தையும், அம்முதற் பொருளின் பேரருள் விளக்கத்திற்கு இடமாய் மேலோராற் பண்டைக் காலந்தொட்டு வணங்கப்பட்டு வரும் பிள்ளையார் முருகப்பிரான் முதலானோர் திருவுருவங்களையும் இவர்களின் அருள்வழிப்பட்ட அடியார் திருவுருவங்களையு மன்றி வேறு எவற்றையும் வணங்குதல் சிறிதும் ஆகாது என்று கடைப்பிடித்தல் வேண்டும்". (அறிவுரைக் கொத்து. ஆறாம் பதிப்பு, வெளியீடு : பாரி நிலையம். சென்னை)

இவ்வாறான அறிவுரைகளைக் கடைப்பிடிக்காது, நெறியல்லா நெறியில் நின்று, தம்மையும் சைவசமயிகள் என்று கூறுவோருக்குத் திருமுறை போற்றுந் தெய்வம் சிவனே என்பதை உணர்த்த வேண்டியது இப்போதைய முக்கிய தேவையாகும்.

**"காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட் டோட அதன்பிறகே**
**ஓடுந் தொழிலாற் பயனுளதோ ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிராய்**
**ஆடுங் கருணைப் பரஞ்சோதி அருளைப் பெறுதற் கன்புநிலை**
**தேடும் பருவம் இதுகண்டீர் சேர வாருஞ் சகத்தீரே"**

என்று அனைவரையும் அழைக்கின்றார் தாயுமானவ சுவாமிகள்.







Printed by : **Luxmi Printer.** 195, Wolfendhal Street, Colombo - 13. Tel : 2448545, 2473533 Fax : 2330588 E-mail : luxmiprint@sltnet.lk